வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 03 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 112 பக்கங்கள் : 16






08
அதி நவீன ஆயுதங்களுடன் ரஷ்ய படைகளின் மூர்க்கமான தாக்குதல்



09
ரஷ்ய ஜனாதிபதி புடினின் சொத்து மதிப்பு எவ்வளவு?



07
கடன் வலையிலிருந்து காப்பாற்ற இலங்கைக்கு இந்தியா என்ன செய்யப்போகிறது?



10
தடைபோடும் எதிரிகள்... தகர்த்தெறியும் சூட்சுமங்கள்

# மனிதாபிமான முறையில் மீனவர் பிரச்னைக்கு தீர்வு

## இலங்கையிடம் வலியுறுத்தியது இந்தியா

கொழும்பு, மார்ச் 27

மனிதாபிமான அணுகுமுறையின் அடிப்படையில் இரு நாட்டு மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணுமாறு இலங்கை அதிகாரிகளிடம் இந்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இரு தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் அது வலியுறுத்தியது.

19

## ஜெய்ஷங்கரின் வருகை உறுதி!



கொழும்பு, மார்ச் 27

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கரின் இலங்கை பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நாளை திங்கள்கிழமை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19

## சர்வதேச நாணய நிதிய அறிக்கை வெளியானது!

### திங்கள் அமைச்சரவையில் முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளிவந்துள்ள நிலையில், அது நாளை திங்கட்கிழமை அமைச்சரவையிலும் அதன் பின்னர் பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பான பகுப்பாய்வுகள், புள்ளிவிவர ரீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 இலங்கையின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்ததுடன்,

19

## ‘13’ தான் சாத்தியம் என்பதை தமிழர் தரப்புகள் ஏற்றுள்ளன

### கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தும், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையே சாத்தியமானது என்ற நிலைப்பாட்டுக்கு தற்போது தமிழர் தரப்புக்கள் வந்துள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட

19



## ராஜபக்ஷக்களின் அரசை யாரும் கவிழ்க்கமுடியாது

### அடித்து சொல்கிறார் கஞ்சன விஜேசேகர

கொழும்பு, மார்ச் 27

ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசை எந்தத் தரப்பாலும் கவிழ்க்கவே முடியாது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சிக்கு எதிர்க் கட்சியே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

2015ஆம் ஆண்டு 8.2 வீதமாக இருந்த வெளிநாட்டுக்கையிருப்பு 2019 இல் 7.6 வீதமாகக் குறை வடைந்தமைக்கு நல்லாட்சி

19

## பிம்ஸ்டெக் செயலாளர் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, மார்ச் 27

பிம்ஸ்டெக் அமைப்பின் செயலாளர் நாயகம் டென்சின் லெக்பெல் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

வங்காள விரிகுடா வலய நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒன்றியமான பிம்ஸ்டெகின் உச்சி மாநாடு இம்முறை இலங்கையில் இடம்பெறுகிறது.

19

## நாணய நிதியத்துடன் நாம் நெருங்கி செயற்பட தயார்!

### இலங்கை மத்திய வங்கி பதில்

கொழும்பு, மார்ச் 27

சர்வதேச நாணய நிதியத்துடன் நெருங்கிச் செயற்படத் தயாராக இருப்பதாக அதன் அறிக்கைக்கு பதிலளிக்கையில் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய அறிக்கையின் சில பரிந்துரைகளை, இலங்கை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அத்துடன், பொதுமக்கள், வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நேரடியாக பிரதிபலன் கிடைப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்துடன்

19

## தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவேண்டும் ரெலோ

### வலியுறுத்துகிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 27

13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ள ரெலோ, ஜனாதிபதியுடனான சந்திப்பை ஏன் புறக்கணித்தார்கள் என்பது கேள்விக்குறியே. அவ்வாறெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேற வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில்

19



## இன்றும் மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 27

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய இன்றும் நாடளாவிய ரீதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

அதன்படி, ஏ முதல் எல் வரையிலான பிரிவுகளில் காலை 8.30 மணி முதல்

19

## மின் உற்பத்தி நிலையங்களுக்கு 9,000 மெற்றிக் தொன் எரிபொருள்

கொழும்பு, மார்ச் 27

கெரவலப்பிட்டி உள்ளிட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு சுமார் 9,000 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

கெரவலப்பிட்டி அனல் மின்நிலையம் எரிபொருள் பற்றாக்குறையால் கடந்த 24ஆம் திகதி முதல் செயலிழந்திருந்தது.

இந்த மின்நிலையம் மூலம் நாட்டுக்கு 270 மெகாவோட் மின்சாரம் வழங்கப்படுகிறது.

எரிபொருள் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால் பல மின்னுற்பத்தி நிலையங்கள் இன்னும் செயல்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## இப்படியும் நடக்கிறது...!

யாரும் எதிர்பாராதது போல கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு நடந்து முடிந்திருக்கின்றது.

எதற்காக அழைத்திருக்கிறார் என்பதையே அறிந்து கொள்ளாமல் அந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ தான் இப்போது விழி பிதுங்கி நிற்கின்றது.

இந்தப் பத்தியில் திரும்பத்திரும்ப அவர்களின் பகிஷ்கரிப்பு குறித்து யோசிக்க வலியுறுத்தி வந்தோம். அது நடந்து முடிந்த கதை.

ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. அது யார் இன்று ஆட்சியில் இருந்தாலும் நடந்திருக்குமோ என்னவோ. அதுவல்ல இன்றைய பிரச்னை. இதிலிருந்து நாட்டை மீட்டுவரவேண் டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு மாத்திரமல்ல, அனைவரினதும் கடமை.

ஆட்சியாளர்கள் மீது மக்களின் வெறுப்பு அதிகரிக்கின்றபோது, அடுத்த ஆட்சியைப் பிடிக்கக்கூடிய கட்சிகள் அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்துவதும், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப தம்மாலான முயற்சியை எடுப்பதும் அரசியலில் நடக்கக்கூடியதுதான். நடக்கவேண்டியதும்கூட. அதுவல்ல இங்கே நாம் எழுத வருவது.

கூட்டமைப்பை சந்தித்த ஜனாதிபதி, அவர்கள் தெரிவித்த அன்றாடப் பிரச்னைகள் குறித்து உடனடித் தீர்வுக்கு இணங்கியதும், அரசியல் தீர்வு தொடர்பாக தொடர்ந்து பேச இணங்கியிருப்பதும் வரவேற்கப்படவேண்டியவைதான்.

கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், எல்லைப் பகுதிகளை மாற்றி சிங்கள மக்கள் தொகையை அதிகரிக்க எடுக்கப்படும் முயற்சி, புராதன சைவ ஆலயங்களில் வழிபட தொல்லியல் திணைக்கள நெருக்கடிகள் போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டிய கூட்டமைப்பினர், அதற்கு உடனடித் தீர்வை வலியுறுத்தியுள்ளனர்.

இராணுவம் தமது தேவைக்காக காணிகளை அபகரிப்பதாக கூட்டமைப்பினர் கூறியபோது, ஆச்சரியத்துடன் அதனைக் கேட்ட ஜனாதிபதி, தனக்கு அது குறித்து தெரிந்திருக்கவில்லை என்று கூறியதை பலரும் ஆச்சரியத்துடன் பார்த்திருந்தனர்.

கூட்டம் முடிந்து வெளியே வந்துகொண்டிருந்த இரண்டு கூட்டமைப்பு எம்.பிக்கள், அவருக்கு தெரியாது என்பதெல்லாம் நடிப்பு என்று தமக்குள் பேசிக்கொண்டதையும் கேட்க முடிந்தது.

ஆனால், அவருக்கு தெரிந்திருக்கவில்லை என்பதை பின்னர் நடந்த சம்பவம் ஒன்று உணர்த்தியிருந்தமை பற்றியும் நேற்றைய செய்திகளில் பார்த்தோம்.

இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தொலைபேசியில் சுமந்திரனுடன் தொடர்புகொண்டு அப்படி எங்கே காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்ற விவரத்தை கேட்டிருப்பது இந்த உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கின்றது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட இன்னுமொரு முக்கிய விடயம், புலம்பெயர் தமிழர்களின் உதவி- முதலீடுகளைப் பெறுவது தொடர்பானது.

அண்மையில் இலங்கை வந்து சென்றிருந்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணைச் செயலர், உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறும், புலம்பெயர் தமிழர்களின் உதவியைப் பெற முயலுமாறும் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து இந்த புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

அவரது விஜயத்துக்கு பின்னர் நடந்த சர்வகட்சி கூட்டத்தில், இது குறித்து கருத்துச் சொன்ன கூட்டமைப்பின் பேச்சாளர் ஆபிரகாம் சுமந்திரன், புலம்பெயர் தமிழர்களுடன் ஒரு இணைப்பாளராக பணியாற்றத் தான் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்ததாகவும் ஒரு செய்தி கூறியது.

புலம்பெயர் நாடுகளில் பொது வைபவங்களில் கலந்து கொள்ளவே முடியாமல் இருக்கும் ஒருவரால் எப்படி இந்தப் பணியைச் செய்யமுடியும் என்று தெரியவில்லை.

அதுவல்ல நாம் இப்போது சொல்ல வருவது. இந்த செய்திகள் வெளிவந்த உடனேயே, தாங்கள் தான் புலம்பெயர் தமிழர்களின் ஏஜெண்டுகள் என்பதுபோல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கிளம்பியிருக்கின்றது.

'தமிழ் தேசத்தின் பொருளாதாரத்தை புலம்பெயர் உறவுகளின் பங்களிப்போடு கட்டியெழுப்ப எம்மால் முடியும்.

'ஒற்றையாட்சியின் கீழ் நீங்கள் விடும் தவறுகளுக்கு நாங்கள் பலிக்கடா ஆகமுடியாது. எம் தேசத்தை ஆளும் உரிமை எமக்கு வேண்டும்' என்ற கோஷங்களுடன் நேற்று யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை அது நடத்தியிருக்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் முதலிடவேண்டும் என்ற கோரிக்கை தீவிரமடைந்துள்ள இந்த வேளையில் அது தம்மால் முடியும் என்று முன்னணி கூற முன்வருவது ஆச்சரியமானதல்ல என்கிறார் ஒரு மூத்த அரசியல் ஆய்வாளர்.

ஏற்கனவே புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் பல்வேறு கோணங்களில் முதலிடப்பட்டு வருகின்றன. அதிகம் ஏன், இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கே அவர்களின் முதலீடுகள் தானே உதவுகின்றன என்ற அவரின் கருத்தும் கவனிக்க வேண்டியது.

அரசில் கட்சிகளின் செயற்பாட்டுக்கு புலம்பெயர் தமிழர்கள் பங்களிப்புச் செய்வதும் ஒருவகையில் முதலீடு என்று சொல்ல வருகிறாரோ தெரியவில்லை.

இதுபற்றி பிறிதொரு நாளில் விரிவாக பேசுவோம்.!

- ஊர்க்குருவி.

# ஜனாதிபதியை சந்திக்க தயாராகும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்?

கொழும்பு, மார்ச் 27

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்க விருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புறக்கணித்திருந்தது.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மீது அதிருப்தி கொண்டிருப்பதால் அந்த மாநாட்டை புறக்கணித்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

எனினும் அவர் தமக்கு அமைச்சுப் பதவியை கோரியதாகவும் அதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவித்த நிலையிலேயே சர்வகட்சி மாநாட்டை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் புறக்கணித்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த தகவலும் உண்மைக்கு புறம்பானது என்று ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் மீது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிருப்தி கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதியுடன் கரிசனைக் குரிய முக்கிய விடயங்கள் தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவரை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஜீவன் தொண்டமானை தொடர்பு கொண்டு கேட்டபோது, அவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று இருப்பதை உறுதிப்படுத்தினார்.

(அ)

# முன்னாள் அமைச்சர் உட்பட நால்வர் விசேட அதிரடிப்படையினரால் கைது

கொழும்பு, மார்ச் 27

யானை முத்துக்களை சட்ட விரோதமான முறையில் விற்பனை செய்ய முயற்சித்த முன்னாள் அமைச்சர் உட்பட நால்வர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் விசேடஅதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது முன்னாள் அமைச்சரும், கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பண்டு பண்டாராநாயக்கவே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

ஒரு கோடி ரூபா பெறுமதியான முத்துக்கள் இவ்வாறு விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் பாடசாலை ஆசிரியை ஒருவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புலனாய்வுத் தகவலுக்கு அமைய முன்னாள் அமைச் சர் பயணம் செய்த வாகனத்தை சோதனையிட்டபோது இந்த முத்துக்களை ஆசிரியையிடமிருந்து விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

மேலும், வாகனத்திலிருந்து கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பண்டு பண்டாரநாயக்க மத விவகார அமைச்சராக வும், சுற்றாடல் தொடர்பான ராஜாங்க அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

## கொரோனா தொற்றால் மேலும் இருவர் மரணம்!

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் நேற்று முன்தினம் 02 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,454ஆக அதிகரித்துள்ளது.

(அ)

# தங்கத்தின் விலை நேற்றும் எகிறியது

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் தங்கத்தின் விலை இன்றும் 7 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் என வரலாற்றில் முதல் தடவையாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

ரஷ்யா-உக்ரை மீது போர் ஆரம்பமானதில் இருந்து சர்வதேச பங்குச் சந்தை மீதான முதலீடு குறைவடைந்து தங்கம் மீதான முதலீடு அதிகரித்தது. இதனால் உலக சந்தையில் தங்கத்தின் விலை பெருமளவு உயர்வடைந்தது. எனினும் அதில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாச்ல் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை 22 கரட் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 250 ரூபாயாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் ஒரு லட்சத்து 55 ஆயிரத்து 850 ரூபாயாக காணப்பட்டது.

24 கரட் தூய தங்கம் நேற்று ஒரு லட்சத்து 77 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஒரு வாரமாக 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டது. (அ)

# மலையகத்தில் தொடர் வறட்சி

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

கொழும்பு, மார்ச் 27

மத்திய மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையினையடுத்து காசல்ரி நீர்த்தேக்கத்தில் வரலாறு காணாதளவு நீர் தாழிறங்கியுள்ளது. இதனால் நீரில் மூழ்கி கிடந்த பல கட்டடங்களின் அடையாளங்கள் ஆலயங்கள் தீவுகள் ஆகியன தோற்றம் பெற்றுள்ளன.

குறித்த நீர்த்தேக்கத்தில் நேற்று முன்தினம் வரை 12.4 வீத நீர் மாத்திரமே எஞ்சியிருப்பதாக மின்சாரத்துறை பொறியியலாளர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக வறட்சியான காலநிலை நிலவுவதனால் இந்த நீர்த்தேகத்தில் நீர் மட்டம் மேலும் குறைவடையலாம் எனவும் எனவே நீரினை மிகவும் கவனமாக பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிகவெகுவாக குறைவடைந்துள்ளதன் காரணமாக தற்போது மின் துண்டிப்பு இடம்பெற்று வருகின்றது. கடந்த காலங்களில் ஐந்து, ஆறு மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் எரிபொருள் மற்றும் நீர்த்தேக்கங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக 10 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேநேரம், மலையகத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையினையடுத்து நீர் ஓடைகள், நீரூற்றுக்கள் ஆகியனவும் வற்றிப்போய் உள்ளன. இதனால் தற்போது பல பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

(அ)

ஈழநாடு
Eelanadu
27.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு?

கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நடந்து முடிந்திருக்கின்றது. இவ்வாறானதொரு சந்திப்பை, சம்பந்தன் பல மாதங்களாக எதிர்பார்த்திருந்தார். தமிழ் மக்களுக்கு பிரத்தியேக அரசியல் பிரச்னைகள் இந்த நாட்டில் இல்லையென்று வாதிட்டுவந்த ராஜபக்ஷ தரப்பு, கூட்டமைப்பை சந்தித்திருப்பதும், கூட்டமைப்பு அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்தியிருப்பதும், அரசாங்கத்தின் இறங்கு நிலைக்கு சான்றாகும்.

ஒருவேளை, சூழ்நிலையை சமாளிக்கும் நோக்கில் இவ்வாறானதொரு சந்திப்பிற்கு ஜனாதிபதி இறங்கியிருந்தாலும் கூட, கூட்டமைப்புடன் பேசுதல் என்பது, அவரது முன்னைய நிலைப்பாடுகள் அவருக்கு கைகொடுக்கவில்லை என்பதையே காண்பிக்கின்றது. அதேவேளை, சம்பந்தனும் கடும் தொனியில் சில விடயங்களை வலியுறுத்தியிருக்கின்றார். அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தையே அமுல்படுத்த முடியாவிட்டால், அதற்கு மேல் இந்த அரசாங்கத்தால் எதனை செய்ய முடியும்? கூட்டமைப்பின் இந்தக் கேள்விக்கு, அரசாங்கத்திடம் பதிலில்லை.

அதேவேளை, அரசாங்கம் புதியதோர் அரசியல் யாப்பை கொண்டுவர முற்பட்டால் அதற்கு அரசாங்கத்திற்குள் எந்தளவு ஆதரவு இருக்குமென்பதும் பெரியதொரு கேள்வி. விரைவில் அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாமலாக்குவோம் என்னும் பங்காளிகளின் சூளுரைகள் மத்தியில் தான், கூட்டமைப்பு – ஜனாதிபதி சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. ஜனாதிபதியின் உடல் மொழியும் முன்னைய கோட்டாபய ராஜபக்ஷவை காண்பிக்கவில்லை.

ஜனாதிபதி – கூட்டமைப்பை எவ்வாறான நோக்கத்திலும் சந்தித்திருக்கலாம். ஆனால், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்பங்களையும் கூட்டமைப்பினர் எவ்வாறு கையாளுகின்றனர் என்பதுதான் முக்கியமானது. அந்த அடிப்படையில், கூட்டமைப்பினர் முன்வைத்திருக்கும் விடயங்களுக்கு ஜனாதிபதி எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றார் என்பதைப் பொறுத்து, கூட்டமைப்பினர் தொடர்ந்தும் விடயங்களை முன்னெடுக்கலாம்.

நல்லிணக்கத்தின் ஆரம்பமாக – குறிப்பிட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணி அபகரிப்பு தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் முன்னேற்றங்களை காண்பித்தால், கூட்டமைப்பு தொடர்ந்தும் உரையாடுவதில் தவறில்லை. ஆனால், அரசாங்கம் வழமைபோல் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கில் செயற்படுமாக இருந்தால், இந்த முதல் சந்திப்புடன் கூட்டமைப்பு விடயங்களை கைவிடவேண்டும். ஏனெனில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெறுங்கையுடன் திருப்பிவருவது அரசியலாக இருக்க முடியாது. அதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையை கையாளுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக, இவ்வாறான சந்திப்புக்களை அரசாங்கம் கையாள முற்படுவது தொடர்பிலும் கூட்டமைப்பு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

எந்த விடயமாக இருந்தாலும், அனைத்தும் இறுதியில் ஒரு மேசையில்தான் விவாதிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இலங்கைக்குள் பிரச்னைகளை கையாளுவதற்கு விரும்பியோ – விரும்பாமலோ, ஆளும் தரப்புடன்தான் பேசியாக வேண்டும். அவர்கள் எவராகவும் இருக்கலாம். ஆனால், எந்தவொரு பேச்சுவார்த்தையும், தமிழர்களின் விடயத்தில் முன்நோக்கி பயணிப்பதற்கான வாய்ப்பாக இருக்கவேண்டும். ஒருவேளை, முன்நோக்கி பயணிக்க முடியாவிட்டாலும் கூட, தமிழர்களுக்கு ஓரளவு சாதகமாக இருக்கின்ற வாய்ப்புக்களை இல்லாமலாக்கிவிடக் கூடாது.

இந்த விடயங்களின் அடிப்படையில்தான் கூட்டமைப்பு அதன் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை, கூட்டமைப்பு அதன் உள்ளூர் வாக்கு வங்கியையும் இழந்துவிடக் கூடாது. ஏற்கனவே, கூட்டமைப்பு தேர்தல் அரங்கில் பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றது. தேர்தல் அரசியலில் பின்னடைவுகளை சந்தித்தால், மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியையும் இழந்துபோக நேரிடும்.



# புடினின் நண்பி அலினாவை சுவிஸ் அரசு பாதுகாக்கிறதா?

## வெளியேற்றுமாறு கோரி மனு

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

*ரஷ்யாவின் அலினா கபேவா உலகறிந்த ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை. ஒலிம்பிக் கில் தங்கங்களையும் உலக சம்பியன் போட்டிகளில் பதக்கங்களையும் அள்ளியவர். தாள நடனத்துடன் இணைந்த ஜிம்னாஸ்டிக்கின் வரலாற்றில் எப்போதும் பெருமைக்குரிய இடத்தில் இருப்பவர்.*

*இடையில் ஊக்க மருந்து தொடர்பான சர்ச்சையால் இரண்டு ஆண்டுகள் போட்டிகளில் இருந்து விலக்கப்பட்டார். அக்காலப்பகுதியில் ரஷ்ய அதிபரது செல்வாக்குக்கு உட்பட்டு அரசியலில் இறங்கினார்.*

*2005 இல் விளாடிமிர் புடினின் ‘ஐக்கிய ரஷ்யா’ கட்சியின் (United Russia party) அதி உயர் அதிகார சபையின் உறுப்பினர்க ளில் ஒருவரானார். புடினுடன் பொதுநிகழ்வுகளில் தோன்றினார். 2008 இல் நாட்டின் அரச ஊடகங்களுக்கான பொதுச் சபை யின் தலைவியாக நியமிக்கப்பட்டபிறகு மொஸ்கோவில் மிகவும் செல்வாக்கு மிகுந்த பெண்ணாக விளங்கினார்.*

*முதல் மனைவியை விவாகரத்துச் செய்த புடின் அலினாவுடன் நெருக்கமாகியமை அவர்களிடையிலான உறவைச் சர்ச்சைகளுக்கு உள்ளாக்கின. 2008 இல் மொஸ்கோ பத்திரிகை ஒன்று (Moskovski Korre spondent) புடின் - அலினா உறவைக் கேள்விக்கு உள்ளாக்கியது. இருவரும் திருமணம் செய்யவுள்ளனர் என்ற தகவலை வெளியிட்டது. புடின் பின்னர் அதனை மறுத்திருந்தார். அதன் பிறகு இந்த விவகாரம் ரஷ்யாவில் பகிரங்க ரகசியமாக இருந்து வருகிறது.*

*இந்த நிலையில் -*


*சுவிஸ் நாட்டின் அல்ப்ஸ் பகுதியில் பாதுகாக்கப்பட்ட பங்களா ஒன்றில் அலினாவும் அவரது மூன்று குழந்தைகளும் தங்கி வாழ்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. இப்போதும் அலினா அங்கே தஞ்சமடைந்துள்ளாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. உக்ரைன் மீதான போர் தொடங்கிய பிறகு அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு கேட்டு சுவிஸ் அரசின் மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.*

*ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் மொழிகளில் Change.org இணையத் தளத்தில் தொடங்கப்பட்ட கையெழுத்துச் சேகரிக் கும் மனு, அலினாவை உடனடியாக வெளியேற்றுமாறு சுவிஸ் அரசைக் கோருகின்றது. ரஷ்யா, உக்ரைன், பெலாரஸ் நாட்டவர்களின் 75 ஆயிரம் கையொப்பங்களைக் கோரியுள்ள அந்த மனுவில் இதுவரை 66 ஆயிரம் பேர் ஒப்பமிட்டுள்ளனர். ரஷ்ய நாடாளுமன்றமாகிய டூமாவின் உறுப்பினராகவும் விளங்கிய அலினா, போரை முன்னெடுப்பதற்காக புடின் தீட்டிய திட்டங்களுக்கு உடந்தை யாக இருந்துள்ளார் என்று அந்த மனு வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடகங் களைக் கட்டுப்படுத்துகின்ற சட்டங்களி லும் அவருக்குத் தொடர்பு இருப்பதால் சுவிஸ் அரசு தனது நடுநிலைத் தன்மையைப் பேணும் வகையில் அலினாவை வெளியேற்ற வேண்டும் என்றும் மனு கோருகின்றது. சுவிஸ் மறைவிடத்தில் இருந்தவாறு புடினின் போருக்கு ஆதரவு வழங்கிவரும் அவரது ஒலிம்பிக் பதக்கங்களையும் பறிமுதல் செய்யவேண்டும் என்றும் பிறிதொரு மனுவில் கோரப்பட்டுள்ளது.*

*உஸ்பெகிஸ்தான் நாட்டில் பிறந்த அலினா கபேவாவுக்கு (Alina Kabaeva) தற்சமயம் 38 வயதாகும். இரண்டு இரட்டைக் குழந்தைகள் உட்பட அவரது ஐந்துபிள்ளைகளில் மூவர் அவரோடு சுவிஸில் தங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.*

*(படம் : புடினுடன் அலினா. நன்றி: ரோய்ட்டர்.)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’





# இந்தவார ராசிபலன் 27.03.2022 – 02.04.2022

மார்ச் - 27 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - பங்குனி - 13
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : தசமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

திட்டங்கள் சரியான நேரத்தில் முடியும். வாகனம் அல்லது வீடு புதுப்பிப்பதால் வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். பிள்ளைகளால் நன்மை உண்டு. அலுவலக விவகாரத்தில் நேரம் செலவிட முடியாமல் தவிப்பீர்கள். பல காலமாக நினைத்த விஷயம் பெரியவர்களின் ஆசியுடன் நல்லபடியாக முடியும். உறவினர், நண்பர்களுக்கு உதவுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிகழ்வுகளால் ஏற்பட்ட மன அழுத்தம் நீங்கும். எந்த வேலையையும் நிதானத்துடன் அணுகுவீர்கள். ஆன்மிக சிந்தனை மேலோங்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நண்பர்கள் வீட்டு சுப விஷயங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவீர்கள். நிதி விஷயங்களில் கவனமாக இருந்து நற்பலன் பெறுவீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டு முடிவுகளை எடுக்க தடுமாற்றம் ஏற்படக் கூடும். உங்கள் சேமிப்பு பணம் பிள்ளைகளுக்கு சரியான நேரத்தில் கைகொடுக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். செலவு செய்யும் முன் பலமுறை யோசியுங்கள். உறவினர் ஒருவருக்கு உதவும் நிலை ஏற்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

சரியான ஓய்வு கிடைக்காமல் உழைக்க நேரிடும். வாரத்தின் இறுதியில் குடும்பத்துடன் மகிழ்ச்சியும் பிணைப்பையும் உணர்வீர்கள். கருணையுடன் நன்மை செய்தும் நற்பெயர் எடுக்க வாய்ப்பில்லை. சமூகத்தில் மதிப்பு கூடும். வீடு, சொத்து சம்பந்தமான முயற்சியில் முன்னேற்றம் காணப்படும். நண்பர்களின் செயலால் நன்மையடைவீர்கள். தீய வழியில் உங்களைச் செலுத்துபவரின் நட்பை தவிர்க்கவும். உங்களிடம் உதவிகள் பெற்றவர்கள் பாராட்டாமல் புறம் பேசினால் கவலைப்படாதீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனதில் நிம்மதி பிறக்கும். குடும்பத்தினருடன் குறைவான நேரம் செலவழிக்கும் நிலை உருவாகும். அலுவலக வேலைகளை கவனமுடன் செய்வது அவசியம். குடும்பத்தினர்களுடன் அன்பாகப் பேசுவதன் மூலம் சிக்கல்களைப் பெரிதாகாமல் தீர்க்க முடியும், குடும்பத்தில் வருமானம் அதிகரிக்கும். தாயாரின் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகளுக்கான செலவுகள் அதிகமாகும். உறவினரிடையே காணப்பட்ட அமைதியின்மை சரியாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நண்பர்களுடன் சங்கடமான சூழ்நிலைகள் ஏற்படலாம். எந்தவொரு முக்கியமான முடிவையும் வார இறுதிக்கு ஒத்திவைப்பது நல்லது. கணவருக்கு ஃ மனைவிக்கு அலுவலகத்தில் சந்தோஷ செய்தி காத்திருக்கிறது. பணியாளர்களுக்குச் சில எதிர்ப்புக்கள் இருக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. பயணத்தின்போது விழிப்புடன் இருக்கவும்.பணம் வருவதால் ஒரு எண்ணம் ஈடேறும். பொது நல சேவை செய்வதால் உங்களின் மதிப்பு அதிகரிக்கும். வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பணி காரணமாக அலைச்சல் கூடும். நண்பர்களால் நன்மை ஏற்படும். பணியாளர்களுக்கு அலுவலகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வெற்றி வாய்ப்பு சந்தோஷம் தரும். அலைந்து திரிந்து வெற்றிகரமாக ஒரு செயலை முடிப்பீர்கள். திருமணம் பற்றிய நல்ல தகவல் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் ஆதரவு கொடுத்து உதவுவார்கள். குடும்பத்தில் அமைதி சீரான நிலையில் இருக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை..தெய்வப் பணிகளில் ஈடுபாடு உண்டாகும். ஆன்மிகப்பெரியவர்களின் நட்பு கிடைக்கும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மனத்துணிவு கூடும். குடும்ப நலனில் அக்கறை உண்டாகும். அதிகாரப்பதவியில் உள்ளவர்களுக்குக் கூடுதல் பொறுப்பு வரும். பண வரவு தாமதப்பட்டு கிடைக்கும். சிக்கன நடவடிக்கை காரணமாக நன்மை காண்பீர்கள். வீண்வம்பு காரணமாக மற்றவர்களின் ஏளனப் பேச்சுக்கு ஆளாகாமல் கவனமாக இருங்கள். சருமம் சம்பந்தமான பிரச்னை ஏற்படலாம். ஆனால் விரைவில் சரியாகும். கோபம் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவர்ஃ மனைவி அலுவல்ரீதியாக பயணம் மேற்கொள்வார்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

காதல் அல்லது திருமண உறவு மேம்படும். மகிழ்ச்சி கூடும். பெற்றோர் உடல்நிலை திருப்தியளிக்கும். நட்பு பலப்படும். குடும்பத்தினரால் நன்மை அடைவீர்கள். ஆரோக்கியத்தில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வெற்றியைப் பெறும் சாதகமான சூழ்நிலை உருவாகும். நீங்கள் செய்யும் தீர்மானம் பெரிய வெற்றிக்கு அழைத்துச் செல்லும். வரவு செலவு ஏற்ற இறக்கத்துடன் இருக்கும். அனுபவம் மிக்க ஒருவரின் ஆலோசனை கிடைக்க வாய்ப்புண்டு.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்களின் விடா முயற்சி நிதி விஷயத்தில் வெற்றி தரும். நல்லோர் உதவியால் பொருளாதார நிலை வலுவடையும். திடீரென வீட்டுக்கு விருந்தினர் வருவர். வெளிநாடு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் இத்தனை காலம் இருந்த தடை விலகும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். குடும்ப பிரச்னை பற்றி வீணாக வேதனைப்பட வேண்டாம். பெண்களால் நன்மையும் ஆதரவும் அடைவீர்கள். பணியிடத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சியில் சாதகமான பலன் தரும். வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். பணியாளர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். மேலதிகாரிகள் உங்களிடம் நல்ல அணுகுமுறையை செயல்படுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். நிதானமாக வெற்றி இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். நிதானத்தை கடைபிடித்து மற்றவர்களிடம் பிரச்னை வராமல் காத்துக்கொள்வீர்கள். குடும்பத்தில் இனிமையான சூழல் நிலவும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உழைப்பின் பயனாக அதிர்ஷ்டம் வரும். எண்ணித் துணியும் விஷயம் பெரும்பாலும் தப்பாமல் நடக்கும். கணவன் மனைவியிடையே இணக்கம் ஏற்படும். அலுவலகத்தில் வீண்பிரச்னைக்கு ஆளாகலாம். திருமணம் போன்ற சுபவிஷயங்கள் ஏற்பாடாகும். குழந்தைகள் உங்கள் மனதைப் புரிந்துகொண்டு செயல்படுவர். அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நன்மை அடைவீர்கள். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையின் முயற்சிகள் வெற்றி பெறும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உணர்ச்சிவசப்பட வேண்டாம். மன உறுதி தேவை. சுப செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கூடுதல் கவனம் தேவை. நீண்டதூர பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். நீண்ட கால திட்டங்கள் நிறைவேறும். பொருளாதாரம் சிறக்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். வார்த்தைகளை அளந்து பேசுவது நன்மை தரும்.

# ஆதங்கப் பகிர்வு

பகிர்வு -22

கணபதி சர்வானந்தா

ஒருவனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிலையினை மலரச் செய்வது கல்வி. அன்பு, அது அறநெறி, பண்பு, பணிவு, ஒழுக்கம் போன்றவற்றை ஏற்படுத்தி மக்களை வாழ வைக்குமானால் அதுவே சிறந்த கல்வி. இதனை எடுத்துரைத்தவர் சுவாமி விவேகானந்தர்.

தற்போதைய கல்விமுறை பிற மொழிப் பாடல்களை மனனம் செய்வது போல, பொருள் புரியாமல் மனனம் செய்ய வைக்கப்படுவதாகக் கல்வித் துறைசார் பெருந்தகை ஒருவர் குற்றம் சுமத்தினார். மதிப்பெண்ணை அதிகம் பெறுவதற்கு ஒருவனைத் தயாராக்கும் கல்வி முறை எமக்கு எதற்கு? என்றும் அவர் வாதாடினார். கற்றலின் பயன் என்ன? அதனூடாக மாற்றங்களை உருவாக்குதல் வேண்டும். பொதுவாகச் சமூக நீதி காத்தல், சூழலுக்கு நட்புடைமையோடு நடத்தல், உலகச் சகோதரத்துவம் பேணல், சமுதாய மேன்மை, கண்ணியம், சகிப்புத் தன்மை, இணங் கிப்போதல், பண்பாடு சார்ந்த அற நெறிகளைக் கடைப்பிடித்தல் போன்றவற்றை ஏற்படுத்துவதாகக் கல்வி இருக்கவேண்டும்.தற்போதைய கல்விமுறையை அவர் ஏற்றுக் கொண்டதாக இல்லை. பொதுவாகக் கல்வி என்பது ஒருவனைப் பண்பாளனாக்க உதவ வேண்டும். அவனைச் சான்றோனாக்க வழி காட்ட வேண்டும் என்கிறது திருக்குறள்.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மண் . -

என்னும் குறள் வாக்கிற்கேற்பச் சான்றோர்களால் தான் இவ்வுலகம் நிம்மதியாக இனிதுற இயங்குகிறது. மனிதர்களைப் பிரித்தாளுகின்ற சுயநலம், வெறுப்பு, செருக்கு, பொறாமை போன்ற குணங்களைக் களைவதாகக் கல்வி முறை இருக்க வேண்டும். அத்துடன் நற்பண்புகளால் சமூகத்தைப் பிணைப்பதோடு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவர்களை இட்டுச் செல்வதான கல்வி முறை ஒன்றை ஏற்படுத்துவதே தற்போதைய தேவை.

பெற்றோர் தமது பிள்ளைகளை ஒரு குறிக்கோளுடனேயே வளர்ப்பர். அதுவும் கல்வி கற்பித்தலில் விசேடமாக அரச தொழில் வாய்ப்பு என்ற ஒன்றை இலக்கு வைத்தே தமது எதிர் கால நடவடிக்கைகளை மேற்கொள்வர். “நீ அவர் போல எதிர் காலத்தில் ஒரு வைத்தியராக வர வேண்டும். இவரைப் போல ஒரு பொறியியலாளராக வேண்டும்” எனச் சொல்லிச் சொல்லியே பிள்ளைகளை வளர்ப்பதைப் பார்த்திருக்கிறோம். எமது மத்தியிலே காணப்படும் ஒரு பொதுச் செயற்பாடு இது. ஒருவனை மனிதனாக வளர்ப்பதை விட மனித இயந்திரமாக வளர்ப்பதிலேயே எம்மவருக்கு அக்கறை அதிகம். அவனைப் பண்பாளனாகப் பார்ப்பதைவிடப் பணமுள்ளவனாகப் பார்க்கவே இந்த உலகம் விரும்புகிறது. பண்பைவிடப் பணத்தால் எதனையும் சாதிக்கலாம் என்று அது அதிகம் நம்புகிறது.

அது மட்டுமல்லாது இலங்கையிலுள்ள கல்வியைப் பல காரணிகள் தீமானிக்கின்றன. எமக்குப் புகட்டப்படும் கல்வியானது எந்த வகையிலும் எமக்குகந்ததாக இல்லை எனப் பலர் குற்றம் சுமத்துகின்றனர். அதில் உண்மை உண்டு. உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் கல்வியில் ஆதிக்கத்தை செலுத்துகின்றன. தகவல் தொடர்பாடல் அறிவின்மை, யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் போன்றவற்றால் ஏற்படும் பக்க விளைவுகளும் கல்வி வளர்ச்சியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. அது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது தென்னிந்தியாவிலுள்ள கோயம்புத்தூர் பள்ளிக்கூடம் ஒன்றினால் பெற்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்வரும் கடிதத்தைக் கண்டேன்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

உங்களுடைய பிள்ளைகளுக்கான பரீட்சை விரைவில் ஆரம்பமாகவுள்ளது. பிள்ளைகள் பரீட்சையைச் சிறப்பாக எழுத வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருப்பீர்கள் என நம்புகின்றோம்.

எனினும் இந்த விஷயங்களையும் கவனத்திற் கொள்ளுமாறு பணிவாய்க் கேட்டுக் கொள்கின்றோம். தேர்வில் குறைந்த மதிப்பெண் எடுக்கும் மாணவர்களில் ஒரு கலைஞன் இருப்பான். அவனுக்கு கணிதம் தேவைப்படாது.அங்கே ஒரு தொழிலதிபர் இருப்பான் அவனுக்கு வரலாறு மற்றும் இலக்கியம் அவசியமில்லை. ஒரு இசைஞானி இருப்பான். அவனுக்கு இரசாயனவியல் தேவைப்படாது. ஒரு விளையாட்டு வீரனிருப்பான். அவனுக்கு அவனது உடல் நலனே முக்கியமான விடயம். மாறாகப் பௌதீகவியல் புள்ளி அவனுக்கு எந்தவிதத்திலும் பயன்படாது.

பரீட்சையில் அதிக மதிப்பெண் எடுத்தால்தான் அவன் சிறந்த பிள்ளை. எடுக்காவிட்டால் தரம் குறைந்த மாணவன் என்று கருதப்படுவான் என்பதில் எதுவித உண்மையும் இல்லை. அதை ஒருவித அரசியலாகவே பார்க்க வேண்டும். அவ்வாறே கல்விச் சூழ்நிலையும் காணப்படுகிறது. அதுபோன்றே சமூகத்தை உண்மையற்ற விதத்தில் வழிநடத்தி வந்திருக்கின்றனர்.

அதனால், தயவு செய்து ஒருபோதும் இது போன்ற எண்ணங்களால் அவர்களது தன்நம்பிக்கையைப் பறித்து விடாதீர்கள். உங்கள் பிள்ளைக்குச் சொல்லுங்கள் இது வெறும் ஒரு பரீட்சை மட்டுமே. நீ வாழ்கையில் வெற்றி கொள்ள இதை விடப் பெரிய சவால்கள் நிறைய உள்ளன. உன் மீது எமக்குள்ள அன்பும் பாசமும் நீ பரீட்சையில் எடுக்கும் மதிப்பெண்ணை வைத்துத் தீர்மானிக்கப் படுவதில்லை. எதிர்காலத்தில் மதிப்புள்ளவனாகப் பல வழிகள் உண்டு. முயற்சித்துப்பார். என்று சொல்லிப் பாருங்கள். பரீட்சையில் வெல்லாத உங்கள் பிள்ளை ஒரு நாள் உலகை வெல்வார்.

வெறுமனே ஒரு பரீட்சை, அதன் மதிப்பெண் உங்கள் பிள்ளையின் கனவை, திறமைகளை அழித்து விடக்கூடாது. மருத்துவர்களும், பொறியாளர்களும் மட்டுமே உலகில் சிறந்தவர்கள், மகிழ்ச்சியாய் இருப்பவர்கள் என நினைக்காதீர்கள். தயவு செய்து அவ்வாறானதொரு எண்ணத்தை அவர்களிடம் விதைத்துவிடாதீர்கள்.

உங்களுக்கு எமது நல் வாழ்த்துகள். நன்றி.

இப்படிக்கு
பாடசாலைச் சமூகம்.

யோவா 9:1-41



"நானே உலகின் ஒளி என்று கூறும் இயேசு பார்வையற்றவரைக் குணமாக்குகின்ற நிகழ்வை நாங்கள் இந்த நற்செய்தியிலே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. "நானே உலகின் ஒளி; என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவா 8:12) என்பதை நிரூபிக்கின்றார்.

இன்றைய நற்செய்தியிலும் இயேசு பார்வையற்ற ஒருவரை சேறு பூசி குணமாக்குகின்றார். தான் சென்ற இடமெல்லாம் ஏழைகளுக்கும் எளியோருக்கும் உதவிய இறைமகன், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட பார்வையற்றோர் பால்தம் இரக்கக் கண்களைத் திருப்பியதில் அச்சரியப்படுவதற்கில்லை.

இயேசு புறக்கண்களுக்கு ஒளி அளிப்பவர் மட்டுமன்று அகக் கண்களையும் திறப்பவர் என்பதை இன்றைய நற்செய்தி வெளிப்படுத்துகின்றது. பார்வையற்றவரின் புறக்கண்களும் திறந்தன. அவருடைய அகக் கண்களும் திறக்கின்றது. "ஆண்டவரே விசுவாசிக்கின்றேன்" (9:38) என்றார்.

உடல் நோய்களுக்கும் குணம் கேட்டும் வரும் நாம், பாவ மாயை "இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு" நம்மையும் அழைத்து வர இயேசுவிடமே வரம் வேண்டி, எமது நம்பிக்கையைப் பலப்படுத்துமென்று வேண்டுவோம். **அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

# பஸில் ராஜபக்ஷவை ஒதுக்கி வையுங்கள்!

## ஜனாதிபதியிடம் தேரர் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 27

"தனது இராச்சியத்தையும், மக்களையும் பாதுகாப்பதற்காக தனது மகளையே மன்னர் ஒருவர் (களனி திஸ்ஸ மன்னர் ) கடலுக்கு பலி கொடுத்தார். எந்த தந்தையால்தான் இப்படியான தியாகத்தை செய்ய முடியும்? இருந்தும் நாட்டுக்காக மன்னர் அதனை செய்தார். இவ்வாறு செய்யுமாறு நாம் உங்களிடம் கோரவில்லை, குறைந்தபட்சம் பஸில் ராஜபக்ஷவை ஒதுக்கிவைத்துவிட்டு பயணத்தை மேற்கொள்ளுங்கள்."

-இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் தேசிய பிக்கு அறிஞர்களின் கருத்தரங்கு' அமைப்பின் பிரதானியான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர்.

2019 ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக தீவிர பரப்புரைகளில் ஈடுபட்ட முக்கிய தேரர்களில் இவரும் ஒருவர்.

வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில உட்பட 11 கட்சிகள் அணியின் பிரதிநிதிகளுக்கும், தேசிய அமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், புத்திஜீவிகளும் மேற்படி ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

மேற்படி சந்திப்பின்போது கருத்து வெளியிடுகையிலேயே பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கையை முன்வைத்தார். இதன்போது தேரர் கூறியவை வருமாறு:

பஸில் ராஜபக்ஷ என்ற நபரால்தான் 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி ஏற்பட்டது. எதிர்காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கும் சக்தியாக அவர் மாறுவார் என்பதை நாம் உணர்ந்தோம். எனினும், தேரரே, என்னை நம்புங்கள், புதிய அரசமைப்பில் இரட்டைக் குடியுரிமை என்ற இடத்துக்கு இடமளிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கினார்.

சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரால் புதிய அரசமைப்பை கொண்டுவர முடியாமல் போய்விட்டது, அந்த பணியை முன்னெடுக்க தங்களால் முடியுமா என ஜனாதிபதியிடம் நான் வினவினேன். நானும் அவர்கள் போன்ற ஒருவர் என்றா நீங்கள் கருதுகின்றீர்கள் என ஜனாதிபதி திருப்பி கேட்டார். ஆனால் இன்று 11 மணிநேரம் மின்வெட்டை அமுல்படுத்தும் நிலைக்கு நாடு வந்துள்ளது.

கொரோனா மட்டும் தற்போதைய காரணம் அல்ல, ஆட்சிக்கு வந்தபிறகு மனிதனர்கள் மாறிவிடுகின்றனர். அதனால்தான் பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. மக்கள் வழங்கிய ஆணையின் முக்கியத்துவத்தை உணருங்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் கோட்டாபய என்னை சந்திக்க வந்தார். அப்போது நான் விடயமொன்றை சுட்டிக்காட்டினேன். இந்நாட்டில் மன்னர் ஒருவர் இருந்தார். அவர் நாட்டுக்காக தனது மகளையே கடலில் போட்டார். எந்த தந்தையால் இப்படி செய்ய முடியும்? ஆனால் நாட்டுக்காக மன்னர் அதனை செய்தார். இவர்களை கடலில் போடவேண்டாம், சற்று ஒதுக்கிவைத்துவிட்டு பயணத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கோரினேன். பஸில் ராஜபக்ஷவை அரவணைக்க நாட்டு மக்கள் தயார் இல்லை." - என்றார் மெதகொட அபயதிஸ்ஸ தேரர். (அ)



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று யாழ். நகரில் போராட்டம்

## விலைவாசி உயர்வை கண்டித்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

**பொருட்களின் விலையேற்றத்துக்கும் பொருளாதாரச் சீரழிவுக்கும் எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.**

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இந்த போராட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க தமிழர் தேசத்தை அங்கீகரி, எமது இனத்தை அழிக்க பெற்ற ஆயுதங்களுக்கு தமிழர்கள் பொறுப்பாளிகளா, அன்று ஆயுதத்தால் அழித்தாய் இன்று பட்டினியால் அழிக்கிறாய், தமிழர் தேசத்தை அங்கீகரித்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர்கள் முதலிடுவர் போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.



இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு சீனா அன்பளிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இலங்கைக்கு 2000 மெற்றிக் தொன் அரிசியை இலவசமாக வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு சீன அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு; வவுனியாவில் முதிரைக் குற்றிகள் மீட்பு

வவுனியா, மார்ச் 27



வவுனியா தவசிக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச்செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகள் மடுகந்தை விசேட அதிரடிப்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த சம்வமானது நேற்று அதிகாலை இடம்பெற்றதாக வவுனியா நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசிய தகவலின் அடிப்படையில் மடுகந்தை விசேட அதிரடிப்படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஓமந்தை, கூமாங்குளம், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த மூவரை கைது செய்ததுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய கப்ரக வாகனம் மற்றும் 10 முதிரை மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் எந்தவித பிளவும் இல்லை!

## ரஞ்சித் மத்தும பண்டார சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 27

"ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித பிளவும் இல்லை. சிலர் வேண்டுமென்றே போலி தகவல்களை பரப்பி பிரச்னையை ஏற்படுத்த முற்படுகின்றனர்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும், தலைமைப்பதவியை கைப்பற்ற சரத் பொன்சேகா முற்படுகின்றார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது உண்மையா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"ஐக்கிய மக்கள் சக்தியின் தேவை உணரப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் ஆதரவு வலுக்கின்றது. அதனால்தால் சிலர் போலி பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர். நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் விரைவில் முன்வைக்கப்படும்." - என்றும் அவர் கூறினார். (அ)

# சந்திரிகா மீண்டும் களத்தில்! ஆட்சிமாற்றத்துக்கு வியூகம்!!

கொழும்பு, மார்ச் 27

**2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து, பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாளர் ஈடுபட்டுள்ளார் என தகவல் கசிந்துள்ளது.**

சில எதிரணிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான வியூகத்தை அவர் வகுத்துவருகின்றார் எனவும், இரகசிய பேச்சுகள்கூட இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அரசியல் பின்புலம் கொண்ட ஒருவரையே சந்திரிகா அம்மையார் இலக்கு வைத்துள்ளார் எனவும், தமிழ் பேசும் மக்களின் ஆதரவை பெறும் வகையிலுமே அந்த நபரை சந்திரிகா, தெரிவு பட்டியலில் முன்னிலையில் வைத்துள்ளார் என அறியமுடிகின்றது.



2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு சந்திரிக்கா அம்மையாரே, திரைமறைவில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டிருந்தார். (அ)

# இனி அமைச்சர்கள் பறப்பதில் சிக்கல்!

கொழும்பு, மார்ச் 27

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பயணங்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியின்றி ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களை வழங்குவதை நிறுத்தியுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவிக்கையில்-

எரிபொருள் பிரச்னை உள்ளிட்ட பல காரணிகளை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பிரதமர் மற்றும் வெளிநாட்டு அரச தலைவர்களின் விஜயங்களுக்கு ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்கள் வழங்கப்படும் - என்றார்.

ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்கள் முன்னர் இலங்கை விமானப்படையால் அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அல்லாத அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்கள் பலர் தமது விமானப் பயணத்திற்காக இலங்கை விமானப்படைக்கு செலுத்த வேண்டிய 10 மில்லியனுக்கும் அதிகமான தொகையை இதுவரை செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# குறிப்பிட்ட திகதிக்கு முன்னரே உணவுப்பொருட்கள் காலாவதி

## மின்வெட்டினால் இந்த நிலைமை

கொழும்பு, மார்ச் 27

மின்வெட்டு காரணமாக விற்பனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் காலாவதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவ்வாறான உணவுகளை விற்பனை செய்த 407 விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது பொதுமக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# அரசிலிருந்து வெளியேறுவோரை உள்ளடக்கி புதிய கட்சி உருவாகும்?

கொழும்பு, மார்ச் 27

அரசின் செயற்பாடுகளால் அதிருப்தி அடைந்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றி பிறிதொரு கட்சியை உருவாக்க இரகசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சுப் பதவி வகிக்கும் அமைச்சர்கள் சிலரின் திட்டங்களை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் இவ்வாறு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து பிரத்தியேகமாக பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# செவ்வாய்க்கிழமை முதல் ரயில் கட்டணம் திருத்தம்

கொழும்பு, மார்ச் 27

அமைச்சரவைக்கு அறிவித்ததன் பின்னர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ரயில் கட்டணங்கள் திருத்தப்படவுள்ளன.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பஸ் கட்டணத்துடன் ஒப்பிடும்போது ரயில் கட்டணங்கள் அதிகளவில் அதிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பொலிஸ் தாக்குதலை கண்டித்து யாழ். நகரில் கண்டனப் பேரணி

## ஏப்ரல் 3 இல் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்களின் தலைமையில் நேற்று சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் அ.லீலாவதி -

எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் கண்டனப் பேரணி முற்றவெளியில் நிறைவடையும்.

இந்த பேரணியில் கட்சி மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகளை கடந்து இந்த போராட்டத்தை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளோம் - என்றார்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அதனை எதிர்த்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் போது இந்த தாக்குதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அரிசி விலை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 27

அரிசி விநியோகம் வீழ்ச்சியடைந்துள்ளமையால் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த வாரம் அரிசி விலை, குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அனைத்து வகையான உள்ளூர் அரிசி வகைகளின் விலைகளும், 3 ரூபாய் முதல் 13 ரூபாய்க்கு இடைப்பட்ட அளவில் அதிகரித்துள்ளன.

அத்துடன், இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளின் விலைகள், 9 ரூபாய் முதல் 18 ரூபாய்க்கு இடைப்பட்ட அளவில் அதிகரித்துள்ளன.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையால், இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசை வீழ்த்த இரு முனை தாக்குதல்!

## உதய கம்மன்பில அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

"இந்த அரசை வீழ்த்துவதற்கு இரு முனைத்தாக்குதல் தொடுக்கப்படும்." - என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஒன்று பாதீட்டை தோற்கடிப்பதன்மூலம் அரசை கவிழ்க்கலாம், இரண்டாவது, அரசுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை கொண்டு வரலாம் என்றும் கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஆளுங்கட்சி வசம் தற்போது 123 ஆசனங்களே உள்ளன. எனவே, இன்னும் 12 பேர் அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால், அரசு பெரும்பான்மையை இழந்துவிடும். தற்போதைய சூழ்நிலையில் 12 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அரசுமீது அதிருப்தியில் உள்ளனர். எனவே, உரிய தருணம் வரும்போது எமது பலத்தைக் காட்டுவோம் - என் றார். (அ)

# பெண்ணொருவரை காப்பாற்றச் சென்ற 2 இளைஞர்கள் ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு!

## பெண் உயிருடன் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

அவிசாவளையில், பெண்ணொருவரை காப்பாற்ற முயற்சித்த இளைஞர்கள் இருவர் சீதாவக்க ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளை - தெஹியோவிட்ட, சீதாவக்க ஆற்றில் நீராடச் சென்ற யாத்திரை குழுவைச் சேர்ந்த பெண்ணொருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்த நிலையில் யாத்திரை குழுவொன்றைச் சேர்ந்த இரு இளைஞர்கள் அந்தப் பெண்ணை காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

ஆயினும் அவர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இதேவேளை நீரில் மூழ்கிய பெண் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ராஜகிரிய மற்றும் கொழும்பு - 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மின்சார கட்டண திருத்தம் குறித்து தற்போது மீளாய்வு

கொழும்பு, மார்ச் 27

மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் தற்போது மீளாய்வு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.


மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கு ஒரு மாதம் ஆகும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கூறினார்.

எவ்வாறாயினும், மின்சாரம் துண்டிக்கப்படும் இவ்வேளையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது நியாயமானதல்ல என தமது ஆணைக்குழுவின் அபிப்பிராயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)




# இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சீன - இந்திய உதவிகள் எத்தகையவை?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

ஈழத்தமிழ் அகதிகளின் முதலாம் மாபெரும் அலை, ராமேஸ்வரம் - தனுஷ்கோடி கரையில் ஜூலை 24, 1983இல் வீசியது. கொழும்பில் நடந்த தமிழர்களுக்கு எதிரான கொடூர சிங்கள தாக்குதல் தொடர்ந்த சில மணி நேரத்திலேயே இந்த அகதிகளின் படகுகளால் பாக் ஜல சந்தி கடற்பகுதி நிரம்பியது. அப்பொழுது தொடங்கிய அந்த அகதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே போனது. ஒரு கட்டத்தில், மத்திய அரசின் உதவியோடு நடத்தப்பட்ட 113 தமிழக அகதி முகாம்களில் 1.34 லட்சம் பேர் இருந்தனர். பணம், மானிய உணவுப்பொருட்கள், இலவசக் கல்வி மற்றும் மருத்துவம், அகதி முகாம்களில் இலவச தங்குமிடம் என்று, இவர்களுக்கு எல்லாமே வழங்கப்பட்டன.

1983-2010 காலகட்டத்தில் நான்கு கட்டமாக மூன்று லட்சம் அகதிகள் வந்து இருந்தனர் என்கின்றன அரசு தரப்பிலான தரவுகள். மே 2009இல் ஈழப்போர் முடிந்தபின்னர் நிலைமை ஓரளவு சீரானபின்பு, இவர்களில் பலர் நாடு திரும்பியிருக்கிறார்கள். இப்போது, 106 முகாம்களில் சுமார் 60,000 அகதிகள் உள்ளனர். ராமேஸ்வரம் - தனுஷ்கோடி கடற்பகுதியில் வந்து இறங்கும் ஈழ அகதிகளை முதற்கட்டமாகத் தங்கவைக்கும் மண்டபம் முகாம் இவற்றுள் மிகப்பெரியது. இங்கு தங்க வைக்கப்படும் அகதிகள் பிறகு மாநில மறுவாழ்வுத்துறை அதிகாரிகளால் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். எனதருமை ‘ஈழநாடு’ நண்பர்களுக்கு ஈழ வரலாற்றின் இந்தத் தகவல்கள் நிச்சயம் தெரிந்திருக்கும். நான் சில அகதி முகாம்களில் அதிக நேரம் செலவிட்டிருக்கிறேன். அந்த சூழலில் அவர்கள் அனைவருமே நன்றாக கவனித்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். வசதி குறைந்தவர்களாக இருந்தாலும், உள்ளூர் மக்கள் இந்த அகதிகளை தொப்புள் கொடி உறவுகளாக நினைத்து ஆதரவு தருகிறார்கள். கொத்தனார், தச்சர், ப்ளம்பர், பெயிண்டர் ஆகிய தொழில்களில் இருக்கும் உள்ளூர் மக்கள் தங்களுக்கு வரும் வேலைவாய்ப்புகளையும் அகதிகளோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினின் சமீபத்திய அறிவிப்பைப் பல வாசகர்கள் கேள்விப்பட்டிருக்கக் கூடும். அகதிகளின் வீடுகளை சீரமைக்கவும் புதிய வீடுகளைக் கட்டவும் 317.40 கோடி ரூபாயுடன், அவர்களுக்கான கல்வி மற்றும் மருத்துவ சேவைகளில் மேம்பாடு உள்ளிட்ட பல புதிய திட்டங்களையும் அரசு முகாம்களில் உள்ள ஈழ அகதிகளுக்காக அவர் அறிவித்துள்ளார். இந்தத் திட்டங்களை மேற்பார்வையிடும் குழுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மூத்த அதிகாரிகள், அகதி முகாம்களைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. “இதுவரை வந்த திட்டங்களிலேயே இவை மிகவும் பிரம்மாண்டமானவை” என்று குறிப்பிட்டார் அகதி முகாமில் இருக்கும் ஒரு ஈழ நண்பர்.

1983இல் தொடங்கிய அகதிகளின் வரலாறு முதற்கொண்டு, இந்தத் தகவல்கள் எல்லாவற்றையும் நான் பகிர்ந்துகொள்வதற்குக் காரணம், கடந்த ஐம்பது ஆண்டுகளாக பெரும்பான்மை பௌத்த - சிங்கள அரசுகள் மற்றும் அரசியல்வாதிகளால் கடும் வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டுள்ள ஈழ மக்களுக்கு தமிழக அரசும் மக்களும் மட்டுமல்லாமல், டெல்லியில் உள்ள அரசும் எப்போதுமே ஆதரவும் அக்கறையும் அளித்துவருகிறது என்பதை வலியுறுத்துவதற்குத்தான். இன்னும் கூடுதலாகவே இந்தியா ஈழத்தமிழர்களுக்கு உதவியிருக்கலாம் என்பதையும், சில நிகழ்வுகளின் அணுகுமுறையை இந்தியா மாற்றிக்கொண்டிருக்கலாம் என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால், நான் பலமுறை கூறியதுபோல, மற்றவர்களோடு ஒப்பிடும்போது தங்களுடைய சொந்த தலைவர்களால்தான் ஈழமக்கள் அதிகமாகக் கைவிடப்பட்டிருக்கிறார்கள், இப்போதும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

முன்பு தனுஷ்கோடியில் வந்து இறங்கிய ஈழ அகதிகளுக்கும் இப்போதைய ஈழ அகதிகளுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதை பலரும் அறிந்திருப்பீர்கள். கடந்தகால அகதிகள் ஈழப்போரிலிருந்து உயிர் தப்ப வந்தவர்கள், இப்போது வந்து இறங்கும் மக்கள், பட்டினிச்சாவால் பீதி அடைந்து இங்கு வருகிறார்கள்.

இதுவரை 16 பேர் வந்திருக்கிறார்கள். இந்திய கப்பற்படையும் கடலோர காவல்படையும் பாக் ஜலசந்தியில் பாதுகாப்பை அதிகப்படுத்தியிருக்கிறது என்பதால், இன்னும் அதிகமானோர் வரலாமா என்பதும் விவாதிக்கப்படுகிறது. அதிகமான வெளிநாட்டு நிதி உதவியும் சர்வதேச நிதியகத்திலிருந்து வரும் உதவியும் வரக்கூடும் என்பதால், அடுத்த சில வாரங்களில் இந்த மோசமான பொருளாதார நிலைமை கொஞ்சம் சரியாகலாம் என்பதற்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

ஒரு பில்லியன் டொலர் மதிப்பிலான உணவு, மருந்து மற்றும் எரிபொருட்களை இந்தியாவிடமிருந்து இலங்கை வாங்கிக்கொள்ளலாம் என்ற டெல்லி அறிவிப்பு வந்த சில நாட்களிலேயே, 2.5 பில்லியன் டொலர் நிதி உதவி தருவதாக சீனா அறிவித்துள்ளது. சென்ற திங்கட்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய சீன தூதர் ஜீ ஜென்ஹாங், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்குக் கடன் உதவியாக வழங்குவது, மற்றும் 1.5 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருட்களை இலங்கைக்குத் தருவது ஆகியவைபற்றி சீன அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்றார். ஏற்கனவே சீனாவிடம் இலங்கை 3.5 பில்லியன் டொலர்கள் கடன் பட்டிருக்கிறது.

பெஜிங் மற்றும் கொழும்புக்கு இடையில் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான ஏழாம் கட்ட பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கும். “இது, இலங்கையின் ஏற்றுமதிக்கு மிகவும் உதவும். சீனாவில்

## சீனா விரிக்கும் கடன் வலையிலிருந்து காப்பாற்ற இலங்கைக்கு இந்தியா என்ன செய்யப்போகிறது?

இலங்கையின் பண்டங்களுக்குப் பெரிய வரவேற்பு இருக்கிறது” என்று சீன தூதர் ஜீ கூறினார். கோவிட் பரவலாலும், இப்போது ரஷ்ய-உக்ரைன் போராலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியும் குறைந்ததில் அந்நிய செலாவணி வருமானம் குறைந்துள்ள சூழலில் இந்த செய்தி இலங்கைக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடும்.

அடுத்த சில வாரங்களுக்கு சீனா விரிக்கப்போகும் பெரிய கடன் வலையிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற இந்தியா என்ன செய்யப்போகிறது, எப்படி டெல்லி காய் நகர்த்துகிறது என்பதை நான் கவனமாகப் பார்ப்பேன். என்னுடைய முந்தைய ‘ஈழநாடு’ கட்டுரைகளில், இந்த விஷயத்தில் இந்தியாவுடன் ஒப்பிடும்போது சீனாவுக்கு பொருளாதார வலிமை கூடுதலாக உண்டு என்று கூறியிருக்கிறேன். உலகிலேயே மிகப்பெரியது என்று கூறப்படும் அந்நிய செலாவணி கையிருப்பைக்கொண்ட சீனா, உலக அளவில் மிக அதிகமான



நிதியைக் கட்டுப்படுத்துகிறது. இலங்கையைத் தன் பிடியில் கொண்டு வருவதற்காக சீன அதிபர் ஜீ ஜின்பிங் எத்தனை பில்லியன் டொலர்களை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் தரலாம். ஆனால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டே உதவிகளை வழங்க முடியும். தவிர, அவர் செய்யும் செலவுகள் இந்தியாவின் தலைமை கணக்காளரால் சரி பார்க்கப்படும். இதுபோக, இன்னொரு முக்கியமான அம்சமும் உண்டு, தமிழ் மற்றும் சிங்கள வகுப்பினரான சில இலங்கைத் தலைவர்கள் சீன பணத்தால் கவரப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் பக்கத்திலிருந்து பார்த்தால், நில அமைப்பு ஒரு பெரிய சாதகமாக இருக்கிறது. வெறும் 18 கடல் மைல் தொலைவில் இந்தியாவும் இலங்கையும் இருக்கின்றன. ஆனால், இந்த அருகாமை அம்சத்தை வைத்துக்கொண்டு, இலங்கையைத் தன் குடைக்குக்கீழ் கொண்டுவர இந்தியா பெரிதாக எதுவும் செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் முக்கியமான ஆதரவையும் இந்தியா இழந்துவிட்டது. அவர்களின் ஆதரவைத் திரும்பப்பெற இந்தியா அழுத்தமாக எதையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் சீன தூதுவரோ, வேட்டி கட்டிக்கொண்டு நல்லூர் கந்தனை வழிபடுவதாக பாவனை செய்கிறார்.

இந்தியப் பெருங்கடலில் பரவவேண்டும் என்ற நோக்கத்தோடு சீனா செய்துவரும் விஷயங்களைப் பற்றிப் பேசும்போது, சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ டெல்லிக்கு விஜயம் செய்தத்தைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். ஆப்கானிஸ்தானிலிருந்து காத்மண்டுவுக்கு செல்லும் வழியில் இந்தியாவுக்கு வந்த வாங், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலை வெள்ளிக்கிழமை காலையன்று சந்தித்து ஒரு மணிநேரம் பேசினார். பிறகு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஏப்ரல் 2018இல் பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜீ ஜின்பிங் ஆகியோருக்கு இடையில் வூஹானில் பேச்சுவார்த்தை நடந்தபோது விவாதிக்கப்பட்ட ‘இந்தியா-சீனா ப்ளஸ்’ என்ற தெற்கு ஆசிய திட்டத்தை மீண்டும் புதுப்பிக்கலாமா என்று வாங் யீ கேட்டபோது, எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரம்மாண்ட படைகள் இருக்கும்வரை இந்தியாவுக்கும் சீனாவுக்குமான உறவு இயல்பானதாக இருக்க வாய்ப்பே இல்லை என்று ஜெய்ஷங்கர் தெரிவித்தார். ஒருசார்பான ஆசியாவை சீனா முன்னிறுத்த வில்லை என்றும், ஆசியாவில் இந்தியாவின் வரலாற்று ரீதியான பின்னணி கொண்ட பங்களிப்பை சீனா மதிக்கிறது என்றும் வாங் ஜெய்ஷங்கரிடம் கூறியதாக சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

சீனா தந்த இனிப்பு மருந்தை உடனே விழுங்கிவிட்டு தொண்டை அடைக்கும்போது அதை நினைத்து டெல்லி வருந்தியதைப்போல இல்லாமல், இந்த முறை வாங்கின் திட்டங்களை டோவாலும் ஜெய்ஷங்கரும் உன்னிப்பாக கவனித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

சீனாவின் ஏமாற்றுக்கலை பற்றி டெல்லியைச் சேர்ந்த ‘பயனியர்’ நாளிதழில் ஒரு கட்டுரை வந்திருந்தது. முன்னாள் இராணுவ அதிகாரியும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் முன்னாள் லெப்டினன்ட் ஜெனரலுமான போபிந்தர் சிங் எழுதிய அந்தக் கட்டுரையில், பெல்ட் சாலை மற்றும் இந்தியா-பாகிஸ்தான் பொருளாதரா வழித்தடம் உட்பட, நிலம் சார்ந்த முக்கியமான திட்டங்களை சீனா எவ்வாறு கையிலெடுக்கிறது என்றும், தாராளமாக காசை வாரி வழங்குவதன் மூலம் பிற நாடுகளை எப்படிக் கடன் பொறியில் சிக்க வைக்கிறது என்றும் விளக்கப்பட்டிருந்தது. “இந்தியாவுடனான கல்வான் பள்ளத்தாக்கு பிரச்னை மற்றும் தெற்கு சீனக்கடலில் அமெரிக்க கப்பற்படையின் இருப்பைப் பிரச்னையாக்குவதுபோல மிகவும் குறைவான இராணுவ செயல்பாடுகளிலேயே சீனா ஈடுபடுகிறது. தன்னுடைய பரவலாக்கம், ஆதிக்கம் சார்ந்த எண்ணங்களை நோக்கி சீனா அழுத்தமாக செயல்படுகிறது. இந்த தெளிவான, மூர்க்கமான நோக்கத்துக்குப் பின்னால் மரபுசார்ந்த, அரசியல் ரீதியான சில உள்ளுணர்வுகளும் இருப்பதால், செயல்பாடுகள் நேர்க்கோட்டில் இருப்பதில்லை” என்கிறார் போபிந்தர் சிங்.

“பிற நாடுகளைக் கவர்வது, விலைக்கு வாங்குவது, மிரட்டுவது, வழிக்குக் கொண்டுவருவது போன்றவற்றை சீனா ஒரே நேரத்தில் செய்கிறது. இந்த நடவடிக்கையைப் புரிந்துகொள்வது கடினம், ஏனென்றால், ஏமாற்றுவித்தையை அடிப்படையாகக்கொண்ட, முரணான செயல்பாடுகள் இவை” என்று போபிந்தர் சிங் விளக்குகிறார்.

அரசியல் தலைவர்களின் சுயநல செயல்பாடுகள், பிற தலைவர்களின் செயல்திறனற்ற நிலை மற்றும் சீன கடன் பொறி ஆகிய இந்த இரண்டு அம்சங்களைப் பற்றி ஏன் நான் திரும்பத் திரும்ப எழுதுகிறேன் என்று உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். இவை என்னை பாதிக்கின்றன. அதேசமயம், நன்கு படித்த, அறிவார்ந்த குடிமக்கள் இவற்றைப் பற்றி கவலைப்படுவதில்லை என்பது என்னை இன்னும் பாதிக்கிறது. என் ஈழ மக்கள் அனுபவித்த கொடுமைகளை எல்லாம் நேரில் பார்த்தபிறகு, அன்புக்குரியவர்களின் இழப்பால் ஈழமக்கள் வலி அனுபவித்தபோது அதைப் பகிர்ந்துகொண்டபிறகு, இந்த அக்கறை எனக்குள்ளிருந்து வருகிறது, அதனால் தான் இந்தப் புலம்பல், இது உங்களுக்கு எரிச்சலைத் தந்தால் மன்னித்துவிடுங்கள்.

மீண்டும் சந்திப்போம், வணக்கம்



ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளை எதிர்த்து ஆலோசகர் பதவியை ராஜினாமா செய்த சுபைஸ், நாட்டைவிட்டும் வெளியேறி புடினுக்கு அதிர்ச்சி கொடுத்திருக்கிறார். இதேபோல கடந்த வாரம், ரஷ்யாவின் பொருளாதார ஆலோசனைக்குழுவில் பணியாற்றிய அர்காடி ட்வோர்கோவிச் என்பவரும், ரஷ்யப் போருக்கு எதிர்ப்பு தெரிவித்து பதவியை ராஜினாமா செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நா.வருணன்

# அதி நவீன ஆயுதங்களுடன் தீவிரமடையும் ரஷ்ய படைகளின் மூர்க்கமான தாக்குதல்

## சரணடைய மறுக்கும் உக்ரைனின் தற்காப்பு யுத்தம்

ஒரு மாதத்தைத் தாண்டியும் நீடிக்கிறது ரஷ்யா-உக்ரைன் போர். ரஷ்யாவின் இடைவிடாத தாக்குதல்களைத் தொடர்ந்து சமாளித்துவருகிறது உக்ரைன். இந்தப் போரில் நிகழ்ந்த சமீபத்திய சம்பவங்கள் இங்கே...

### ஹிட்லரிடம் தப்பி... புடின் தாக்குதலில் உயிரிழந்தவர்!

உக்ரைன் நாட்டின் கார்கிவ் நகரிலுள்ள குடியிருப்புக் கட்டடம் ஒன்றில் ரஷ்யா நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில், போரிஸ் என்ற 96 வயது முதியவர் உயிரிழந்தார். அவரது இழப்பு குறித்து உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ, ஹஹ96 வயதான போரிஸ், ஹிட்லரின் நான்கு நாஜி வதை முகாம்களிலிருந்து உயிர் தப்பியவர். கார்கிவ் நகரில் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்துவந்தார்.

அவரது வீட்டில் ரஷ்யத் துருப்புகள் வெடிகுண்டு வீசியதால் உயிரிழந்துவிட்டார். ஹிட்லரிடமிருந்து உயிர் பிழைத்தவர், தற்போது புடினால் கொல்லப்பட்டிருக்கிறார்” என்று ட்விட்டரில் பதிவிட்டிருக்கிறார்.

ஹிட்லரை, தனது படைகளால் சுற்றிவளைத்து தற்கொலை செய்யவைத்ததும் இதே ரஷ்யாதான் என்பது குறிப்பிடத்தக்கது!

### மக்கள்மீது தாக்குதல்!


கடந்த வாரம் உக்ரைனைச் சரணடைந்து விடுமாறு கடைசி எச்சரிக்கை விடுத்தது ரஷ்யா. அதற்கு, ஹஹரஷ்யா விடுக்கும் மிரட்டல்களுக்கு உக்ரைன் பணியப் போவதில்லை” என்று பதிலடி கொடுத்தார் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி. இந்த நிலையில், உக்ரைனின் கெர்சன் நகரில் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியது ரஷ்ய ராணுவம். ரஷ்யாவின் பிடியிலிருக்கும் கெர்சன் நகரத்தில், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ரஷ்யாவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த ரஷ்ய ராணுவத்தினர், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதோடு, துப்பாக்கிச்சூடும் நடத்தினர். இது தொடர்பான வீடியோவை உக்ரைன் அரசு வெளியிட்டிருக்கும் நிலையில், ‘ஆயுதம் ஏந்தாத பொதுமக்களுக்கு எதிராகத் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறது ரஷ்ய ராணுவம். இது போர் விதிகளுக்கு முற்றிலும் எதிரானது’ என்று சமூக வலைதளங்களில் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இந்த வீடியோவையும் பகிர்ந்துவருகிறார்கள் நெட்டிசன்கள்.

### அழிவை ஏற்படுத்தும் அதிநவீன ஆயுதங்கள்

உக்ரைன் தலைநகர் கீவ்-வைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ரஷ்யப் படைகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன. ஆனாலும், 30 நாள்களுக்கு மேலாக வலிமையான ரஷ்யப் படைகளை, குறைந்த படை பலம்கொண்ட உக்ரைன் சமாளித்துவருகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் வழங்கிய அதிநவீன ஆயுதங்கள்தான் இதற்குக் காரணம் என்கிறார்கள் இந்தப் போரை உற்று நோக்குபவர்கள். குறிப்பாக, அமெரிக்கா வழங்கிய ஜாவ்லின் ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவின் பீரங்கிப்படைகள் மீது தீவிர தாக்குதல் நடத்தி, பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறது உக்ரைன். இதனால், சில இடங்களில் ரஷ்யாவின் பீரங்கிப் படைகள் பின்வாங்கியிருக்கின்றன.

இதையடுத்து, தனது சக்திவாய்ந்த ஆயுதமான Kinzhal ஹைப்பர்சோனிக் ஏவுகணையைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது ரஷ்யா. ஒலியைவிட 10 மடங்கு வேகமாகப் பயணிக்கும் Kinzhal ஏவுகணை, துல்லியமாக இலக்கைத் தாக்கி மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடியது. 2018 இல் இந்த ஏவுகணை அறிமுகப் படுத்தப்பட்டபோது, ‘இது ரஷ்யாவின் சிறந்த ஆயுதம்’ என்று குறிப்பிட்டிருந்தார் ரஷ்ய அதிபர் புதின்.



### குழந்தைகளைக் கடத்தியதா ரஷ்யா?

ரஷ்யத் தாக்குதலால் உக்ரைனில் சுமார் ஒரு கோடி மக்கள் தங்கள் வீடுகளை இழந்துவிட்டதாக உக்ரைன் அரசு தெரிவித்திருக்கிறது. ரஷ்யத் தாக்குதலால் கெர்சன், மரியுபோல் ஆகிய நகரங்களில் லட்சக்கணக்கான மக்களுக்கு உணவு, குடிநீர், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கவில்லை அங்கிருந்து மக்கள் வெளியேற முடியாமலும் தவிக்கிறார்கள். இந்த நிலையில்தான், உக்ரைனிலுள்ள அமெரிக்கத் தூதரகம் திடுக்கிடும் தகவல் ஒன்றை ட்விட்டரில் வெளியிட்டிருக்கிறது. ஹஹஉக்ரைனின் டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளிலிருந்து 2,389 குழந்தைகளைத் தங்கள் நாட்டுக்கு ரஷ்யப் படைகள் அழைத்துச் சென்றிருப்பதாக உக்ரைன் வெளியுறவுத்துறை சொல்கிறது.

“இது உதவி அல்ல் கடத்தல்” என்கிறது அந்தப் பதிவு. இது பற்றிப் பேசிய உக்ரைன் எம்.பி இன்னா சோவ்சன் (Inna Sovsun), “உக்ரைன் மக்களை முகாமுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ரஷ்யா கடத்திச் செல்கிறது. ரஷ்யாவுக்குச் சென்ற பின்னர், அவர்களைப் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி இலவசமாக வேலை வாங்கிக்கொள்கிறது. இது இரண்டாம் உலகப் போரின் போது நாஜிப் படைகள் செய்த வேலைக்குச் சமமானது” என்று கொந்தளித்திருக்கிறார்.

### ராஜினாமா செய்த புடினின் ஆலோசகர்!

1990-களுக்குப் பின்னர், ரஷ்யாவின் பொருளாதாரக் கட்டமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர் அன்டோலி சுபைஸ். ரஷ்ய அதிபர் புதினை, அவரது ஆரம்ப காலத்திலிருந்தே ஆதரித்துவந்த சுபைஸ், தற்போது புதினின் ஆலோசகராகப் பணி யாற்றிவந்தார். சில தினங்களுக்கு முன்னர், மக்கள் மத்தியில் பேசிய புதின், “ரஷ்யா வின் போர் நடவடிக்கைகளை விமர்சிப்ப வர்கள் தேசத்துரோகிகள்” என்று கூறி யிருந்தார்.

இந்த நிலையில்தான், ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளை எதிர்த்து ஆலோசகர் பதவியை ராஜினாமா செய்த சுபைஸ், நாட்டைவிட்டும் வெளியேறி புடினுக்கு அதிர்ச்சி கொடுத்திருக்கிறார். இதேபோல கடந்த வாரம், ரஷ்யாவின் பொருளாதார ஆலோசனைக்குழுவில் பணியாற்றிய அர்காடி ட்வோர்கோவிச் என்பவரும், ரஷ்யப் போருக்கு எதிர்ப்பு தெரிவித்து பதவியை ராஜினாமா செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# ரஷ்ய ஜனாதிபதி புடினின் சொத்து மதிப்பு எவ்வளவு?

**குரு அரவிந்தன்**



ரஷ்ய அதிபர் புதினுடைய சொத்து மதிப்பு என்ன தெரியுமா? பிரபல்யமானவர்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் நிறுவனமான ஹெர் மிட்டேஜ் கப்பிட்டல் என்ற நிறுவனம் சமீபத்தில் புதினுடைய சொத்துக்களை மதிப்பீடு செய்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதன்படி புதினிடம் 15 லட்சம் கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் இருப்பதாகத் தகவல் வெளிவந்திருக்கின்றது.

கருங்கடற்கரையில் உள்ள சொகுசு மாளிகை மட்டும் 1.4 பில்லியன் அமெரிக் டொலர் பெறுமதியானது. இதைவிட சொகுசு விமானம், சொகுசு படகு, சொகுசு ஹெலிக்கெப்டர்கள், சொகுசு கார்கள் போன்றவையும் இவரது இந்த சொத்தில் அடங்கும். 60,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பற்றிக்பிலிப்ஸ் நிறுவனத்தின் கைக்கடிகாரம் உட்பட, பல பிரபலமான நிறுவனங்களின் கைக்கடிகாரங்களும் அவரிடம் இருக்கின்றன.

இதன் அடிப்படையில் பார்க்கப் போனால் இவர் உலகின் பணக்காரர் வரிசையில் 6வது பெரிய பணக்காரராவார். ஆனால் இவை எல்லாம் உறவினர்களின் பெயர்களில்தான் இருக்கின்றன. அவருடைய வருடாந்த வருமானம்140,000 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கலாம் என உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே 69 வயதான ரஷ்ய ஜனாதிபதிக்கு நெருக்கமான பெண் சிநேகிதி ஒருவர் சுவிச்லாந்தில் இருப்பதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஒலிம்பிக் தங்கப் பதக்கம் பெற்ற 38 வயதான இவரை ரஷ்யாவுக்கு நாடு கடத்தும்படியும் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோல் நகரத்தின் மீது கருங்கடலில் தரித்து நிற்கும் ரஷ்ய யுத்தக் கப்பல்கள் கடுமையான தாக்குதல்களை புதன் கிழமை மேற்கொண்டன. கருங்கடலில் ரஷ்யாவின் 21 கப்பல்கள் தரித்து நிற்பதாகவும், அசோவ் கடற்பகுதியில் சுமார் 7 கப்பல்கள் வரை நிற்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைவிட வான் வெளித் தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

யுத்தம் தொடங்கி ஒரு மதமாகி விட்ட நிலையில் மரியுபோல் நகர் மீது போர் விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தன, போதாக் குறைக்கு எறிகணைத் தாக்குதல்களும் இன்று இடம் பெற்றன. குடிநீர், மின்சாரம் போன்றவை தடுக்கப்பட்டதால் மக்கள் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருப்பதாலும், மும்முனைத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறுவதாலும், சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் அகப்பட்டிருக்கும் பொதுமக்களுக்கு உணவு வழங்க முடியாத நிலையில் அந்த நகரம் முற்றுகையிடப்பட்டிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் முற்றுகையின் போது, கடைசி நேரத்தில் உள்ளே அகப்பட்ட தமிழ் மக்கள் போல, உக்ரைனின் துறைமுக நகர மரியுபோல் மக்கள் குழந்தை குட்டிகளுடன் அகப்பட்டுப் போய் தவிக்கிறார்கள்.

இதேபோல, உக்ரைனின் தலைநகரான கீவ்வையும், இரண்டாவது பெரிய நகரமான கார்க்கிவ்வையும் முற்றுகையிட்டுள்ள ரஷ்யப் படைகள் தமது தாக்குதல்களை அங்கும் மேற்கொள்கின்றன. இந்த மூன்று முக்கிய நகரங்களும் தான் தற்போது ரஷ்யாவின் முக்கிய குறியாக இருக்கின்றது. இதில் இலகுவாகக் கைப்பற்றக்கூடிய நகரம், துறைமுக நகரமான மரியுபோல்தான். கடற்பரப்பில் இருந்தும் இலகுவாக முற்றுகையிடக் கூடியதாக இந்தத் துறைமுகம் இருக்கின்றது.

மும்முனைத் தாக்குதலால், அனேகமான கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. தாக்குதல் பகுதியில் அகப்பட்ட சுமார் 7,000 பொதுமக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். மரியுபோலைக் கைப்பற்றினால் உக்ரைனின் கடலாதிக்கத்தை முற்றாகத் தடுத்து விட முடியும் என்ற நம்பிக்கையுடன் ரஷ்யா செயற்படுகின்றது. இந்த நகரத்தின் அழிவைப் பார்க்கும் போது, உலகப் போரில் அழிவுண்ட நகரங்கள் நினைவில் வருவதாக உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உக்ரைனின் கருங்கடல் ஆதிக்கத்தை முற்றாக தடைசெய்து விட்டால், கடல் வழியாக உதவிக்கு நேட்டோ கப்பல்கள் உக்ரைனை நோக்கி வரமுடியாமல் போகலாம். இலகுவாகக் கனரக வாகனங்களை யுத்தமுனைக்குக் கொண்டு செல்லக் கப்பல்களே முக்கிய காவிகளாக இருக்கின்றன. கருங்கடல் மூலம் நேட்டோ நாட்டுப் படைகள் உக்ரைனுக்கு உதவ முன்வந்தால், அதைத் தடுப்பதும், இந்தத் தாக்குதலின் முக்கிய நோக்கமாகும்.

மரியுபோல் துறைமுக நகரத்திற்கு அருகே உள்ள இன்னுமொரு துறைமுகமான பேர்ட்ஜாங்ஸ் துறைமுகத்தை ரஷ்ய படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. இத்துறை முகத்திற்கூடான கனரக வாகனங்கள் உக்ரைன் ஆக்கிரமிப்புக்காகக் கொண்டுவரப்பட்டன. நேற்று முன்தினம் உக்ரைன் படைகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் அங்கு தரித்து நின்ற மூன்று கப்பல்கள் படைகளால் அதிரடித் தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டன. சுமார் 50 கனரக வாகனங்களையும், 400 துருப்புக்களையும் கொண்டு செல்லக்கூடிய வசதிகளைக் கொண்டது இந்தக் கப்பலாகும். இதே போன்றதொரு அதிரடித்தாக்குதல் யுத்த காலத்தில் காங்கேசந்துறை துறைமுகத்திலும் நடைபெற்றது நினைவிருக்கலாம்.

நேட்டோ நாடுகள் ஆயதங்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றன என்ற உக்ரைன் ஜனாதிபதியின் புகாரைத் தொடர்ந்து பிரித்தானியா கனரக வாகனங்களைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளைக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. எற்கனவே 4,000 ஏவுகணைகளை அனுப்பி இருந்த பிரித்தானியா மேலதிகமாக இன்னும் 6,000 ஏவுகணைகளைக் கொடுக்க முன்வந்திருக்கின்றது. பிரான்சும், இத்தாலியும் எண்ணெய், எரிவாயு போன்றவற்றுக்கு ரஸ்யாவை நம்பி இருப்பதால், ரஸ்யாவை நேரடியாகப் பகைக்க அவர்களால் முடியவில்லை.

வெறும் பேச்சு வார்த்ததைகளோடு மட்டும் எல்லா நாடுகளும் ஒதுங்கிக் கொள்வதில் இருந்து, ஒன்றை மட்டும் எம்மால் புரிந்து கொள்ள முடியும். அதாவது உக்ரைன் நாட்டில் இருந்து எந்த ஒருவித பொருளாதார நன்மையும் இந்த நாடுகளுக்குக் கிடைக்கப் போவதில்லை. ரஸ்யாவைப் போல மூலவளங்கள், அதாவது எண்ணெய், எரிவாயு போன்றவை கிடைக்குமானால் ஏனைய நாடுகளின் பார்வையும், நடவடிக்கைகளும் வேறுமாதிரி இருந்திருக்கும். அதனால்தான் அந்த நாடுகள் தங்கள் இருப்பை நிலை நிறுத்த, அவ்வப்போது அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆற்றாமையின் வெளிப்பாடாய்த்தான், உக்ரைன் அதிபரின் ஜெலன்ஸ்கியின் செய்தி நேற்று வெளிவந்தது.

கனடா உட்பட, நேட்டோ நாடுகளை உதவி செய்யுமாறு உக்ரைன் ஜனாதிபதி கேட்டிருக்கின்றார். மற்றும் உக்ரைன் வான்பரப்பில் ஏனைய நாட்டு விமானங்கள் பறப்பதையும் தடை செய்யும்படி கேட்டுக் கொண்டார். இதன் மூலம்தான் எதிர்பில்லாமல் ரஸ்யாவின் விமானத் தாக்குதல்களை நிறுத்த முடியும் என்பதையும் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றும் போது அவர் இதைக் குறிப்பிட்டார். ரஸ்யாவில் இருந்து பிரான்ஸ் நிறுவனங்கள் வெளியேற வேண்டும் என்றும் அவர் அப்போது கேட்டுக் கொண்டார். உக்ரைன் விவகாரம் சம்பந்தமாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சென்ற வாரம் லண்டன், பெர்லின், வார்ஸோ, லட்வியா போன்ற இடங்களுக்கும் சென்றிருந்தார். பெல்ஜியத்தில் நடந்த நேட்டோ நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அதன் பின் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, ஜி 20 அமைப்பில் இருந்து ரஷ்யாவை வெளியேற்ற வேண்டும் என்ற தனது கருத்தை வெளியிட்டார்.




உக்ரைன் - ரஷ்ய யுத்தம் காரணமாக ரஷ்ய வான்வெளி பறப்பு தடைசெய்யப்பட்டிருப்பதால், பயணிகள் விமானங்கள் புதிய பாதைகளால் பயணிக்க வேண்டி இருக்கின்றது. இதனால் பயணிக்கும் நேரம் மட்டுமல்ல, எரிபொருளும் அதிகம் செலவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக விமானக் கட்டணங்களும் உயர வாய்ப்புண்டு. குறிப்பாக யப்பானில் இருந்து லண்டனுக்குப் புதிய பாதைவழியாகச் செல்வதற்கு மேலதிகமான இரண்டரை மணி நேரம் எடுக்கின்றது.


உக்ரைன் சிறார் மருத்துமனையில் புற்றுநோய் காரணமாக அனுமதிக்கப்பட்ட 5 குழந்தைகளை மனிதாபமான முறையில் கனடாவுக்குக் கொண்டு வந்து தகுந்த சிகிட்சை கொடுக்கப்பட இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. ஏற்கனவே இருவர் கொண்டுவரப்பட்டு சிகிட்சை பெறுவதாகவும், இன்னும் மூவர் சில நாட்களில் இங்கு வரப்பட இருப்பதாகவும் தெரிகின்றது. இது போல, உக்ரைனில் உள்ள சுமார் 15 சிறார்களைக் கொண்டு வந்து, கனடாவில் சிகிட்சை கொடுக்க இருக்கிறார்கள்.

ரஷ்யா - உக்ரைன் யுத்தம் பற்றிப் பொது ஊடகங்கள் சிலவற்றில் பொய்யான செய்திகளும் வரத்தொடங்கி விட்டன. வேறு எங்கோ நடந்த சில பழைய யுத்தக் காட்சிகளையும் சிலர் உக்ரைனில் நடந்ததாக இணைத்திருக்கிறார்கள். உக்ரைனுக்கு ஆதரவாக இருப்பதாக் கூறி ரஸ்யா கூகுள் செய்திகளை ரஸ்யாவில் தடை செய்திருக்கின் றது.

கனடாவிலும் உக்ரைன் யுத்தத்தைச் சாட்டிப் பல மோசடிகள் நடப்பதாக கனடிய மோசடி தடுப்புமையம் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விட்டிருக்கின்றது. சிலர் தனிப்பட்ட முறையில் நிதி சேகரிப்பதாகவும், சிலர் உக்ரைன் படையில் இணைந்து சேவை செய்வது போன்ற படங்களைப் பிரசுரித்து பொது மக்களிடம் உதவியை எதிர்பார்ப்பதாகவும், இவர்களிடம் ஏமாற வேண்டாம் என்றும் கனடா மோசடி தடுப்பு மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# தடைபோடும் எதிரிகள்... தகர்த்தெறியும் சூட்சுமங்கள்

**பாதையைத் தேர்ந்தெடுத்துப் பயணிக்கும்போது சில இடங்களில் தடை கள் தோன்றி நின்றுவிடுவோம். அப்படி நிற்கும்போது துவண்டுவிடாதீர்கள். வெற்றிபெற்றவர்கள் எல்லோருமே இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர் கொண்டவர்கள்தாம். கடந்துவிட முடியும் என்று நம்பி செயல்பட்டதுதான் அவர்களுடைய வெற்றிக்கு வழி வகுத்திருக்கும்.**




உங்களுடைய நம்பிக்கைகள், நடவடிக்கைகள் மற்றும் அறிவு போன்றவற்றைப் பயன்படுத்தி உங்களை நோக்கி வருகிற கஷ்டங்களையெல்லாம் தகர்த்தெறிந்து வெல்வது சாத்தியமா..? ஹீதர் மோனஹன் எனும் பெண்மணி எழுதிய 'ஓவர்கம் யுவர் வில்லன்ஸ்' எனும் புத்தகம் இது குறித்துச் சொல்லித் தருகிறது.

"சிலர் 'என்னை வேலையை விட்டுத் தூக்கி விட்டார்கள். என்னுடைய வாழ்க்கையே இந்த நிகழ்வு புரட்டிப்போட்டு விட்டது' எனலாம். பலரும் வேலை போகுதல் என்பது அகந்தையை அடக்குவதற்கான சரியான நிகழ்வு மட்டுமே என்கிறார்கள்.

எனக்கோ பார்த்துக்கொண்டிருக்கும் வேலை திடீரென்று இல்லாமல் போவது என்பது வெறுமனே அகந்தையை அகற்ற எனச் சொல்ல முடியாது. இன்றைக்கு அந்த நாளை திரும்பவும் சிந்தித்துப் பார்த்தால் அந்த நிகழ்வு என்னைப் பொறுத்தவரை அதிர்ச்சியளிக்கக் கூடியதாகவும், பைத்தியம் பிடிக்கச் செய்வதாகவும், ஏன் ஒரு படி மேலே சென்று உண்மையைச் சொன்னால் மனநோய்க்கு வழிவகுக்கும் அளவுக்கும் இருந்தது என்பதுதான் நிஜம்.

இந்தக் காலத்தில் வேலை போவது பெரிய விஷயமா? மற்றொரு வேலை தேடிக்கொள்ள முடியாதா என்பீர்கள். என்னுடைய முன்கதை சுருக்கம் உங்களுக்குத் தெரிந்தால் என் நிலையை முழுமையாக உணர்வீர்கள்.

சிறுவயதில் என்னிடம் வறுமையைத் தவிர வேறொன்றும் இல்லாத நிலையில் வளர்ந்தவள் நான். 10 வயதில் தினசரி பத்திரிகை விநியோகம் செய்து, ஹோட்டலில் மேசை துடைத்து, பின்னர் உணவகத்தில் வேலை செய்து, கல்லூரியில் படிக்கும்போது ஒரு மது அருந்தும் மையத்தில் வேலை செய்து ஒரு வழியாக வறுமையின் இறுக்கத்தில் இருந்து தப்பித்துப் பிழைத்து, படித்து முடித்து ஒரு வேலை கிடைத்து கொஞ்சம் செட்டிலான சூழலில், பார்த்துக் கொண்டிருக்கும் வேலை போனால் எப்படியிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். அதன் தாக்கம் உங்களுக்குப் புரியும்" என்று சொல்லி ஆரம்பிக்கிறார் ஆசிரியை.

"கல்லூரிப் படிப்பை முடித்த பின்னால் சின்னச் சின்ன வேலைகளைச் செய்தேன். நெட்வொர்க்கிங் ஈவென்ட் நிறுவனம் வேலைக்குச் சேர்த்துக்கொள்கிறேன் என்றது. 75,000 டாலர்கள் (ஆண்டுக்கு) கேட்டேன். எப்போது வேலைக் குச் சேருகிறீர்கள் என்றனர். இதி லிருந்து தெரியும் நீதி என்ன..? நீங்கள் உங்களை சரியான அளவில் மதிப்பீடு செய்து கொள்ளாவிட் டால் உங்களை அடுத்தவர்கள் சரியாக மதிப்பீடு செய்ய மாட் டார்கள் என்பதுதான். அந்த நிறுவ னத்தில் சேர்ந்து சிறப்பாகச் செயல் பட்டேன். நல்ல வருமானம். ஆனால், நிறுவனம் சிறியது. எனவே, பெரிய நிறுவனத்துக்கு வேலை மாறினேன். இப்போது பதவியும் பெரியது.

அலுவலகத்தில் எக்கச்சக்க உள் வீட்டு அரசியல். ஏனென்றால், நான் இருக்கும் பதவியில் இரண்டு பேர் இருந்தோம். அதில் மற்றொரு வர் சி.இ.ஓ-வின் மகள். கருமமே கண்ணாக உழைத்து என்னுடைய பிரிவின் விற்பனையின் அளவை இரட்டிப்பாக்கினேன். மூன்று முறை பதவி உயர்வுகள் பெற்றேன். எனக்கு உயர் பதவி ஒன்றும் தரப் பட்டது.

கார், வீடு, வங்கியில் பணம் என எல் லாம் நன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது என்ற சூழலில்தான் எனக்கு வேலை போனது. சொல்லுங்கள், இந்தச் சூழ்நிலை யில் வேலை போவது என்பது அகந்தை அழிக்கும் ஒரு காரியமா என்ன?

எதனால் வேலை போனது என்கிறீர்களா? திடீரென்று சி.இ.ஓ-வுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அதனால் அவர் தன்னுடைய மகளை இடைக்கால சி.இ.ஓ ஆக்கினார். என் வாழ்வில் ஒரு வில்லியாக உருவானாள் அந்தப் பெண். எவ்வளவு அடித்தாலும் வலிக்காத மாதிரியே இருந்தேன். முக்கியமான கூட்டங்களில் என்னை அலட்சியப்படுத்தினார். இதை இப்படியே விட்டால் நிலைமை மிகவும் மோசமாகி விடும். தன்னம்பிக்கையை உடைக்க பாஸ் என்கிற வில்லன் செய்யும் ரெக்னிக் இது.

உங்களுடைய தன்னம்பிக்கையை நீங்கள் வளர்க்கிறீர்களா அல்லது தகர்க்கிறீர்களா என்பது நீங்கள் செய்யும் செயல்களின் மூலமோ, செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் தவிர்க்கும் செயல்களின் மூலமோதான் நடக்கிறது என்பார்கள். இதை நான் நன்கு அறிவேன். இதைச் சரிசெய்தே ஆக வேண்டும் என்பதால், அடுத்து நடந்த சந்திப்பில் அனைவரையும் குசலம் விசாரித்துவிட்டு என்னைக் கவனிக்காமல் செல்ல எத்தனிக்கும்போது நான் 'குட் மார்னிங் மேடம்... என்னை நீங்கள் கவனிக்காமல் தவிர்க்கிறீர்கள்' என்று கூறினேன். என்னுடைய தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள நான் இந்தக் காரியத்தைச் செய்து விட்டேன்.

அவர் நான் இப்படி சொல்வேன் என எதிர்பார்க்க வில்லை. சந்திப்பில் பங்கெ டுத்த பலரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். என்னைப் பொறுத்தவரை என்னை புறக்கணிப்பதை நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்பதைத் தெளிவுபடுத்துவதே நோக்கமாக இருந்தது. அதில் வெற்றி. அவ்வளவுதான். அதன் விளைவுதான் என்னுடைய வேலைபோனது. அதிலும் வில்லனின் வில்லத்தனம் இருக்கவே செய்தது.

சி.இ.ஓ இரண்டு மெமோக்களை என்னிடத்தில் தந்தார். ஒன்றில் ஹீதர் மோனஹன் வேலையை விட்டு நீக்கப் படுகிறார் என்று ஒரே வரி இருந்தது. மற்றொன்றில் ஹீதர் மோனகன் தன்னுடைய பதவியில் இருந்து ராஜினாமா செய்கிறார். அவருடைய திறமையால் நிறுவனம் பெரும் வளர்ச்சி அடைந்தது. நிறுவனம் அவருக்கு எவ்வளவு ஒத்துழைப்புகளை கொடுத்தும் அவர் சொந்த காரணங்களுக்காகப் பதவியை ராஜினாமா செய்வது வருத்தம் அளிக்கிறது எனப் பல துதிகள் எழுதப்பட்டிருந்தது. இந்த இரண்டில் எதை வேண்டுமென்றாலும் நீங்கள் எடுத்துக்கொண்டு கையெழுத்திடலாம் என்றார் சி.இ.ஓ.

பதவி நீக்கம் என்ற ஓலையில் கையெழுத்திட்டால் பத்து பைசா செட்டில்மென்ட் கிடைக்காது. இவ்வளவு நாள் நாயாய் பேயாய் அலைந்து, என் மகனை பல நாள்கள் ஆயாவிடம் (சிங்கிள் மதர் நான்) விட்டுவிட்டு வந்து பணிபுரிந்ததற்கான சன்மானம் இதுதானா என்ற கேள்வி என்னுள்ளே தோன்றியது. என்ன நினைத்து நீங்கள் இந்த இரண்டு மெமோக்களை எழுதினீர்கள் என்று தெரியாது. எனக்கு இந்த இரண்டும் தேவையில்லை. நான் போகிறேன் என்றேன். வில்லனின் முகம் சிவந்தது.

என்னை பழைய ஆளாகவே சி.இ.ஓ மதிப்பிடுகிறார். இதற்கான பதிலை நான் வெற்றி பெறுவதன் மூலமே காட்ட வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது. வீட்டுக்குத் திரும்பும்போது எப்படி வீட்டு அடமானக் கடனைக் கட்டுவேன். பிள்ளையின் படிப்புக்கு எப்படி பணம் கட்டுவேன் என்ற எண்ணம் தோன்றியது. என்னுடைய வில்லன் என்னை தோற்கடிக்கலாம் என்று நினைத் திருப்பார். நானோ இரு கடிதத் தையும் நிராகரித்ததன் மூலம் வில்லனைத் தூக்கியெறிந்து விட்டேன்" என்கிறார் ஆசிரியை.

"ஆனாலும், ஒன்றில் நான் தெளிவாக இருந்தேன். என்னை அந்த நிறுவனத்தில் இருந்து வெளியேற்றிவிடலாம். எனக்கு நிகரான ஒருவரை அந்த இடத்தில் பணிக்கு அமர்த்துவது சாத்தியமில்லை என்பது தான் அது. இது உங்களுக்கும் பொருந்தும். இந்த உலகத்தில் நீங்கள் ஒரு தனித்துவம் வாய்ந்தவர். உங்களுக்கு மாற்று என்பதே கிடையாது என்பதுதான் உண்மையிலும் உண்மையான விஷயம்.

இதை உணர்ந்த அந்த வேலை இழந்த தருணத்தில் நான் மீண்டும் கார்ப்பரேட் அமெரிக்காவில் பணிபுரிய செல்லக் கூடாது என்று முடிவு செய்தேன். நான் இதுவரை பணி புரிந்த நிறுவனங்களுக்கு ஈட்டித்தந்த வெற்றிகளை இனி எனக்காக நான் ஈட்டிக்கொள்வது என்று முடிவு செய்தேன்" என்று சொல்லும் ஆசிரியை அந்த வெற்றிகளை எப்படி ஈட்டினார், அதில் அவர் கண்டறிந்த பாடங்கள் என்னென்ன என்பதை யெல்லாம் தெளிவுபட விளக்கி யுள்ளார்.

ஒரு செயலைச் செய்ய நினைக்கும்போது பயம் வருகிறதா? அதை ஒரு கிறீன் சிக்னலாக நினைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பயத்தைவிட்டு விலகிப் போக அந்தச் செயலைச் செய்வதற்கான திசையில் அதிவேகமாகப் பயணியுங்கள். பயம் உங்களை விட்டு ரொம்ப தூரம் தள்ளிப்போய்விடும். இந்தப் பயணத்தைச் செய்ய முயலும்போது அந்த இடத்துக்குச் சென்றிடாத எவரிடமும் கருத்து கேட்காதீர்கள்.

ஒருவர் போயிராத ஊரைப்பற்றி அவரால் என்ன கருத்து சொல்ல முடியும். அதேபோல் இந்தப் பயணம் என்பது நாம் எதிர்பார்த்ததைப்போல் இருக்காது. நிறைய புதிய விஷயங்களை எதிர்கொள்வோம். எந்த அளவுக்கு புதிய விஷயங்களை எதிர்கொள்கிறோமோ அந்த அளவுக்கு நாம் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரித்துக்கொள்ள முடியும். அதேபோல் இந்தப் பயணத்தில் நாம் பல விஷயங்களை எதிர் கொள்வோம். அந்தச் சூழலில் நமக்கு முக்கியமான ஒன்றாக இருப்பது நம்மைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் முக்கிய மானதாக இருக்க வாய்ப்பில்லை.

ஏனென்றால், அதை அவர்கள் உணர்ந்திருக்கக்கூட மாட்டார்கள். ஒன்றை எப்போது செய்கிறோம் என்பதே (டைமிங்) இந்த உலகில் முக்கியமானதாக இருக்கிறது. அதனால் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் முக்கியமானதில்லை என்று நினைக்கும் விஷயத்தை நாம் செய்து முடிக்கும் வேளையில் அவர்கள் அட இது ரொம்ப முக்கியம் என்று செய்ய ஆரம்பிப்பதைக் கூட நீங்கள் பார்ப்பதற்கு வாய்ப்புள்ளது. உங்களை மிகவும் கண் ணும் கருத்துமாக உற்சாகப்படுத்தவும் ஊக்குவிக்கவும் உங்களைத் தவிர உலகில் வேறொரு நபர் இல்லை" என்கிறார் ஆசிரியை.

பாதையைத் தேர்ந்தெடுத்துப் பயணிக்கும்போது சில இடங்களில் தடைகள் தோன்றி நின்றுவிடுவோம். அப்படி நிற்கும்போது துவண்டுவிடாதீர்கள். வெற்றிபெற்றவர்கள் எல்லோருமே இது போன்ற சூழ்நிலைகளை எதிர் கொண்டவர்கள்தாம். கடந்துவிட முடியும் என்று நம்பி செயல்பட்டதுதான் அவர்களுடைய வெற்றிக்கு வழி வகுத்திருக்கும்" என்கிறார் ஆசிரியை.



மிகவும் எளிய நடையில், வெற்றிப் பயணத்துக்குத் தேவையான சூப்பரான பல ஐடியாக்களைச் சொல்கிறது, இந்தப் புத்தகம்.

- நாணயம்

# குதப் பிளவு ஏற்படக் காரணம் என்ன?

## குதப் பிளவு தொடர்பில் மாதம்பை தள ஆயுள்வேத வைத்தியசாலை

## வைத்தியர் திருமதி நௌபியா இர்ஷாத் வழங்கிய

## நேர்காணல்

**பைஷல் இஸ்மாயில்**



**குதப் பிளவு என்றால் என்ன?**

குதப் பிளவு என்பது ஆசனவாயின் திறப்பை வரிசைப்படுத்தும் தோலில் ஒரு சிறிய கிழிவாகும். பொதுவாக பிளவுகள் கடுமையான வலி மற்றும் குடல் இயக்கத்துடன் இரத்தப்போக்கை ஏற்படுத்தும்.

ஆனால் அவை பெரும்பாலும் வலி மற்றும் இரத்தப்போக்குக்கான பிற காரணங்களாலும் ஏற்படுகின்றன. குதப் பிளவுகள் எந்த வயதிலும் ஏற்படலாம் அத்துடன் சமமான பாலின விநியோகமும் இருக்கும்.

85 - 90 சதவீதமான பிளவுகள் ஆசனவாயின் பின்புற நடுக்கோட்டில் ஏற்படுகின்றது. சுமார் 10 - 15 சதவீதம் முன்புற நடுக்கோட்டில் ஏற்படும். குறிப்பாக ஒரு சிறிய எண்ணிக்கையிலான நோயாளிகள் முன் மற்றும் பின் போன்ற இரண்டு இடங்களிலும் பிளவுகளைக் கொண்டிருக்கலாம்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

குதப் பிளவின் பொதுவான அறிகுறிகளில் வலி மற்றும் குடல் இயக்கத்துடன் இரத்தப்போக்கு ஆகியவை அடங்கும். நோயாளிகள் கடுமையான வலியைக் குறிப்பிடுகின்றனர், குறிப்பாக குடல் இயக்கத்தின் போது, பல நிமிடங்கள் முதல் சில மணிநேரங்கள் வரை இந்த வலி நீடிக்கும். நோயாளிகள் பெரும்பாலும் ஆசனவாயில் இருந்து பிரகாசமான சிவப்பு இரத்தத்தை கவனிக்கிறார்கள், இது கழிப்பறை காகிதத்தில் அல்லது மலத்தில் காணப்படுகிறது. குடல் இயக்கங்களுக்கு இடையில், குதப் பிளவுகள் உள்ள நோயாளிகள் பெரும்பாலும் அறிகுறியற்றவர்களாக இருப்பார்கள். பல நோயாளிகள் மலம் கழிப்பதைப்பற்றி பயப்படுகிறார்கள்.

**குதப் பிளவு ஏற்படக் காரணம் என்ன?**

பிளவுகள் பொதுவாக ஆசனவாயின் உள்புறத்தில் ஏற்படும் அதிர்ச்சியால் ஏற்படுகின்றன. கடினமான, வறண்ட குடல் இயக்கம் இதற்கு பொதுவான காரணமாகும், ஆனால் தளர்வான மலம் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவையும் காரணமாக இருக்கலாம். திசுக்களுக்கு ஏற்படும் காயம் கடுமையான குத வலியை உருவாக்குகிறது, இதன் விளைவாக குத ஸ்பிங்க்டர் பிடிப்பு மற்றும் குத சுருக்கு, தசை அழுத்தம் போன்றவை தொடர்ந்து அதிகரிக்கிறது. குத ஸ்பிங்க்டர் தசை அழுத்தம் அதிகரிப்பதால் காயம் ஏற்பட்ட இடத்தில் இரத்த ஓட்டம் குறைகிறது. இதனால் காயம் குணமடைகின்றது. மேலும், குடல் இயக்கங்களில் அதிக வலி, அதிக குதப்பிடிப்பு, அப்பகுதியில் இரத்த ஓட்டம் குறைந்து சுழற்சி பரவுதல் போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

குதப் பிளவுகள் கடுமையானதாக (சமீபத்திய ஆரம்பம்) அல்லது நாள்பட்டதாக இருக்கலாம் (பொதுவாக 8 - 12 வாரங்களுக்கு மேல் நீடிக்கும்). கடுமையான பிளவுகள் ஆசனவாயில் ஒரு எளிய கண்ணீரின் தோற்றத்தைக் கொண்டிருக்கலாம், அதேசமயம் நாள்பட்ட பிளவுகளில் வீக்கம் மற்றும் வடு திசு இருக்கலாம். நாள்பட்ட பிளவுகளுக்கு சிகிச்சையளிப்பது மிகவும் கடினமாக இருக்கலாம். அல்லது கண்ணீருடன் தொடர்புடைய வெளிப்புறக் கட்டியாகவும் இருக்கலாம். இது சென்டினல் பைல் அல்லது ஸ்கின் டேக் என அழைக்கப்படுகிறது,

மேலும் குத கால்வாயின் உள்ளே இருக்கும் கூடுதல் திசு, ஹைபர்டிராஃபிட் பாப்பிலா என குறிப்பிடப்படும் குத பிளவுகள் இரண்டுக்கும் இடையே உள்ள சில ஒத்த அறிகுறிகளை வைத்துக் கொண்டு நோயாளி அல்லது முதன்மை மருத்துவரால் இதை மூல நோய் என தவறாக கண்டறியப்படுகிறது.

நோயறிதலில் இந்தத் தாமதம் கடுமையான பிளவு ஒரு நாள்பட்ட ஒன்றாக மாறுவதற்கு வழிவகுக்கும். இதற்கு சிகிச்சையளிப்பது மிகவும் கடினமாகிறது. குதப் பிளவைத் தவறாகக் கண்டறிவதால் தீவிர நோய்த்தொற்றுகள் அல்லது புற்றுநோய் போன்ற பிற நிலைமைகள் கண்டறியப்படாமலும் சிகிச்சை அளிக்கப்படாமலும் போகலாம்.


பிளவுகளுக்கு குறைவான பொதுவான காரணங்களில் அழற்சி நிலைகள் மற்றும் சில குத நோய்த்தொற்றுகள் அல்லது கட்டிகள், அதாவது கிரோன் நோய், அல்சரேட்டிவ் பெருங்குடல் அழற்சி, சிபிலிஸ், காசநோய், லுகேமியா, எச்ஐவி/எய்ட்ஸ் அல்லது குத புற்று நோய் போன்றவை அடங்கும். இந்த நோய்கள் நடுப்பகுதிக்கு வெளியே அமைந்துள்ள வித்தியாசமான பிளவுகளை ஏற்படுத்தலாம். அவை பல வலியற்றவை அல்லது முறையான சிகிச்சைக்குப் பிறகும் குணமடையாது.

**இது தொடர்பில் நீங்கள் கூறும் ஆலோசனை மற்றும் அறிவுரைகள் என்ன?**

பெரும்பாலான குத பிளவுகளுக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை. கடுமையான குதப் பிளவுக்கு பொதுவான சிகிச்சையாக நார்ச்சத்து அதிகம் உள்ள உணவில் ஒருவரின் மலத்தை மேலும் சீரானதாக மாற்றுவதுடன், மருந்தின் மூலம் கிடைக்கும் நார்ச்சத்து (ஒரு நாளைக்கு 25 - 35 கிராம்) அளவு பயன்படுத்துதல்.

மென்மையான குடல் இயக்கங்களை ஊக்குவிக்கவும், குணப்படுத்தும் செயல்பாட்டில் உதவவும் மல மென்மையாக்கிகள் மற்றும் நீர் உட்கொள்ளலை அதிகரிப்பதும் அவசியமாகும். தளர்வான, அடிக்கடி மலம் கழிப்பதற்கு வயிற்றுப்போக்கு எதிர்ப்பு மருந்துகளை தேவைப்படும்போது பயன்படுத்தலாம்.

குத வலி மற்றும் சூடான தொட்டி குளியல் (சிட்ஸ் குளியல்) ஒரு நாளைக்கு பல முறை 10 - 20 நிமிடங்கள் (குறிப்பாக குடல் அசைவுகளுக்குப் பிறகு) குளிப்பதன் மூலம் குத தசைகளின் தளர்வைத் தணிப்பதுடன், குணப்படுத்தவும் உதவுகின்றது.





## படமாகிறது அப்துல் கலாம் வாழ்வு

2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்தவர் அப்துல் கலாம். தமிழ்நாடு - இராமேஸ்வரத்தில் பிறந்த அப்துல் கலாம் விஞ்ஞானியாக இருந்தபோது இஸ்ரோ மிகச் சிறப்பாக செயல்பட்டது.

இளைய தலைமுறையினருக்கு அவர் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். பாரத ரத்னா உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ள அப்துல் கலாம் கடந்த 2015ஆம் ஆண்டு மறைந்தார். இவரின் வாழ்க்கை வரலாறு தற்போது திரைப்படம் ஆகப்போகிறது. பிரபல மலையாள இயக்குனர் ஸ்ரீகுமார் என்பவர் இயக்கவிருக்கும் இந்தப் படத்திற்கு விஞ்ஞானியன் என்று பெயர் வைக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த படத்தில் அப்துல் கலாம் ஆக நடிக்கப் போவது யார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

## விஜய் சேதுபதியுடன் விக்ரம்

இயக்குநர் மணிகண்டன் இயக்கத்தில் விஜய் சேது பதி இதற்கு முன்பு ஆண்டவன் கட்டளை மற்றும் கடைசி விவசாயி படங்களில் நடித்தார்.

திரையரங்குகளில் வெளியான கடைசி விவசாயி படத்துக்கு பலரிடமிருந்தும் பாராட்டுக்கள் கிடைத் தது. இந்நிலையில் மணிகண்டன் மீண்டும் விஜய் சேதுபதியை வைத்து புதிய படம் ஒன்றை இயக்க இருக்கிறார் . அந்த படத்தில் விஜய் சேதுபதியுடன் விக்ரமும் இணைந்து நடிக்க இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

விக்ரம், விஜய்சேதுபதி இருவரும் அடுத்தடுத்த நிறைய படங்களில் ஒப்பந்தமாகி உள்ளார்கள் . இந்த படம் பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது .






## சமந்தாவின் வாய்ப்பு திஷாவிடம்!

அல்லு அர்ஜூன், ராஷ்மிகா மந்தனா நடிப்பில் தெலுங்கில் வெளியான படம் புஷ்பா. இந்த படத்தின் முதல் பாகத்தில் ஓ சொல்றியா மாமா என்ற பாடலுக்கு நடனமாடி பெரும் வரவேற்பை பெற்றார் சமந்தா.

இதனால், புஷ்பா இரண்டாவது பாகத்திலும் அவ்வாறான பாடல் ஒன்றில் நடனமாட கேட்டனர். ஆனால், அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார். இந்த நிலையில் அந்த வாய்ப்பு பொலிவூட் நாயகியான திஷா பதானிக்கு சென்றுள்ளது.

திஷா பதானிதான் புஷ்பா படத்தில் சமந்தா நடனம் ஆடிய பாடலுக்கு முதலில் நடனமாட இருந்தவர். அவருக்கு நேரமில்லாததால் அந்த வாய்ப்பு சமந்தாவுக்கு சென்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வைரலாகும் விஜய் படங்கள்



விஜய் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் பீஸ்ட். விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள் ளார் . அனிருத் இசைய மைப்பில் வெளியான இப்படத்தின் இரண்டு பாடல்கள் யூ-ரியூப்பில் பல கோடி பார்வையா ளர்களை கடந்து சாதனை படைத்து வருகிறது. ஏப்ரல் 13 ஆம் திகதி உலகம் முழுவதும் பீஸ்ட் திரைப்படம் திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது. இந்தப் படம் தணிக்கை குழுவிற்கு அனுப்பப்பட்டு ருஃயு சான்றிதழை பெற்றுள்ளது . இந்நிலையில் பீஸ்ட் படத்திலிருந்து விஜயின் இரண்டு படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகமாக பரவி வருகிறது. அந்தப் படங்களில் கையில் துப்பாக்கியும், கோடரியும் வைத்து போஸ் கொடுத்துள்ளார் விஜய்.

## மாளவிகாவின் முடிவு



கவர்ச்சிப் படங்களைச் சமூக வலைதளங்களில் பதிவேற்றி, ரசிகர்களை அடிக்கடி கிறங்கடிப்பவர் மாளவிகா மோகனன்.

எனது படங்கள் வெளியாகும்வரை ரசிகர்ளுக்கு விருந்து கொடுக்க வேண்டும் என்று கூறும் அவர், கவர்ச்சியான கதாபாத்திரங்களில் நடிக்கவே விரும்பு கிறேன் என்று கூறியுள்ளார். அவ்வாறான கதைக்காகவே காத்திருப்பதாகவும் கூறியுள்ளார் அவர்.

# திரை விமர்சனம்

**திரைப்படம் - ஆர். ஆர். ஆர்.**
**இயக்கம் - ராஜமவுலி**
**இசை - மரகதமணி**
**நடிப்பு - ஜூனியர் என்டிஆர், ராம்சரண், ஆலியா பட்**




தெலுங்கு மண்ணில் இந்திய சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய அல்லுரி சீதாராம ராஜூ மற்றும் கொமரம் பீம் ஆகிய போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்று படமாக இல்லாமல் அவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி ஒரு வர்த்தக படத்தைக் கொடுத்துள்ளார் இயக்குநர் ராஜமவுலி.

1920களில் நடக்கும் கதை. ஆந்திரப் பகுதியிலி ருந்து ஒரு பழங்குடி சிறுமியை அடிமையாக டில்லி கொண்டு செல்கிறார் டில்லி ஆளுநரின் மனைவி. தங்கள் இன சிறுமியை மீட்டு கொண்டு வர ஜூனியர் என். டி. ஆர். தலைமையில் ஒரு குழு டில்லி செல்கிறது. டில்லியில் ஆங்கிலேய ஆட்சியாளர்க ளிடம் பொலிஸ் வேலையில் இருப்பவர் ராம்சரண். சிறுமியை மீட்க சிலர் வந்துள்ளார்கள் என்று டில்லி ஆளுநருக்கு தெரிய வருகிறது. என். டி. ஆரைப் பிடிப்பவர்களுக்கு சிறப்பு அதிகாரி பதவி வழங்கப் படும் என ஆளுநர் அறிவிக்கிறார். என். டி. ஆரைப் பிடித்துக் கொடுத்து அதிகாரி பதவியையும் வாங்குகி றார் ராம்சரண். என். டி. ஆரைத் தூக்கிலிடுவதற்கு முன்பு அவரைத் தப்பவும் வைக்கிறார் ராம்சரண். எதற்கு ?, ஏன் ? என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

தமிழ் - இந்திய திரைகளில் இதுவரை பிரம்மாண் டம் என்று சிலாகித்து பாராட்டியதை எல்லாம் சுக்கு நூறாக உடைத்திருக்கிறார் ராஜமவுலி. இந்தப் படத்தில் காட்டியிருக்கும் பிரமாண்டம், கதைக் களம், அதற்காகப் போடப்பட்ட அரங்குகள், படமாக்கம், தொழில்நுட்பம் என ஒற்றை மனிதராக தெலுங்கு சினிமாவை மீண்டும் ஒருமுறை வேறு தளத்திற்கு உயர்த்தியிருக்கிறார்.

ஜூனியர் என். டி. ஆர், ராம்சரண் இருவருமே அவரவர் கதாபாத்திரங்களுக்கான பொருத்தமான தெரிவு. போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். இருவரில் யாருக்கு அதிக பெயர் கிடைக்கும், யார் முதலிடத்தைப் பிடிப்பார் என்றெல்லாம் சொல்ல முடியாத அளவுக்கு தங்கள் நடிப்பால் வியக்க வைக்கிறார்கள். இருவருக்குமே வலிமையையும், அதிரடியையும் காட்டக் கூடிய கதாபாத்திரங்கள். இருவரும் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்திருக்கிறார்கள்.

படம் முழுவதுமே என். டி. ஆர், ராம்சரண் ஆகியோரின் தோள்களில்தான் நிற்கிறது. அதனால் மற்ற கதாபாத்திரங்கள் எடுபடாமல் போவது எதிர்பாராத ஒன்று. ராம்சரணின் காதலியாக அவ்வப் போது வந்து போகிறார் ஆலியா பட். மொத்தமாக ஒரு பக்க வசனம் பேசியிருந்தாலே அதிகம். என். டி. ஆர் - ஒலிவியா மோரிஸ் இடையிலான காட்சிகள் ஆர்யா - எமிஜாக்சன் நடித்த “மதராசப்பட்டிணம்” படத்தை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

ராம்சரண் மாமாவாக சமுத்திரக்கனி, சில காட்சி களில் வந்து போகிறார். பின்னணி கதையில் கணவன் மனைவியாக அஜய் தேவ்கான் - ஸ்ரேயா. வெள்ளை யர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்தி போராடுவதற்காக பயிற்சி கொடுக்கும் தலைவனாக அஜய் தேவ் கான். கொஞ்ச நேரமே வந்தாலும் மற்ற கதாபாத்திரங்களில் உணர்ச்சிப் பெருக்கான நடிப்பால் அவரைப் பற்றிப் பேச வைக்கிறார். டில்லி ஆளுநர் ஸ்கொட் துரையாக ரே ஸ்டீவன்சன்.

படத்தின் உருவாக்கத்தில் இசையமைப்பாளர் மரகதமணி, ஒளிப்பதிவாளர் செந்தில் குமார், கலை இயக்குநர் சாபு சிரில், படத்தொகுப்பாளர் ஸ்ரீகர் பிரசாத், விஷூவல் எபெக்ட்ஸ் ஸ்ரீனிவாஸ் மோகன், சண்டைப் பயிற்சியாளர்கள் என அனைவரும் இயக்கு நர் ராஜமவுலிக்கு சரியாக உறுதுணை செய்திருக்கி றார்கள். குறிப்பாக சண்டைக் காட்சிகளின் பட மாக்கம் வியக்க வைக்கிறது.

படத்தின் நீளம் 3 மணி நேரம் இருந்தாலும் படம் போவது தெரியவில்லை. இடைவேளை வரையிலான காட்சிகள் சில பல திருப்பங்களுடன் பரபரப்பாக நகர்கின்றன. இடைவேளைக்குப் பின் கதை சொல்லல் சாதாரணமாக போய்விட்டது. இப்படித்தான் கதை போகும் என்பதை ஊகிக்கவும் முடிகிறது.

தெலுங்கு ரசிகர்களுக்கும், ஹிந்தி ரசிகர்களுக்கும் வேண்டுமானால் படம் புதிதாகத் தெரியலாம். ஆனால், தமிழ் ரசிகர்கள் இது போன்ற பல பிர மாண்ட சுதந்தி ரப் போராட்ட படைப்புகளை 60 வரு டங் களுக்கு முன்பே பார்த்துவிட்டனர். அவற்றின் இன்றைய 2022 வெர்ஷன்தான் இந்த “ஆர். ஆர். ஆர்”.

# டோனி: என்றும் அரசன்!

ஐயப்பன்

ஐ. பி. எல். அதிகாரத்தில் 12 தொடர்களில் சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) ஆடிவிட்டது. அதில், 11 முறை பிளேஓவ் சுற்றுக்கு முன்னேறி வேறு எந்த அணியும் செய்யாத சாதனையையும் நிகழ்த்திவிட்டது. அங்கிருந்து 9 முறை இறுதிப்போட்டியை எட்டி, நான்கு முறை சம்பியன் மகுடமும் தரித்துவிட்டது. ஆனால், இந்த 12 ஆண்டுகளில் இத்தனை போட்டிகளுக்கும் சி. எஸ். கேயின் தலைவராக இருந்தவர்கள் இருவர்தான். டோனி மற்றும் ரெய்னா. அதிலும் டோனி உடல் நலம் சரியில்லாத சமயங்களில், ஒற்றை இலக்கப் போட்டி களில் மட்டுமே ரெய்னா தலைவராக ஆடியுள்ளார். மற்றபடி, சி. எஸ். கே.என்றால் டோனி, டோனி என் றால் சி. எஸ். கே. எனுமளவு பிரித்துப் பார்க்க முடியாத தாகவே இந்த பந்தம் தொடர்ந்துள்ளது, தொடர்ந்து வருகிறது.

அணிக்கான அஸ்திவாரம் 2008இல் இடப்பட்டதில் தொடங்கி, கோர் அணி கட்டமைக்கப்பட்டு, சி. எஸ். கே. ஏற்ற இறக்கங்களையும், கனவுகளையும் கறைகளை யும் மாற்றி மாற்றி, பல கட்டங்களில் பயணப்பட்டு விட்டது. ஒவ்வொரு முறையும் ஓர் அணியாக புறப்பட்டு வரும் போதெல்லாம் விமர்சகர்கள் பார்வைக்கு அணியில் பல ஓட்டைகள் தென்படும். அது சி. எஸ். கே.யின் சரிவுக்கான சாரமாகப் பார்க்கப்படும். ஆனால், இந்த ஒற்றை மனிதரின் கண்களுக்கு மட்டுமே அது சிகரத்தை நோக்கிய வழியாகக் காணப்படும்.

சி. எஸ். கேவுக்கு தலைமையேற்ற 190 போட்டிகளில், அவரின் அசரவைக்கும் வெற்றி சதவிகிதம் 61.37. வெற்றி பெற்ற இந்த 116 போட்டிகளையும் எடுத்துப் பார்த்தால், பல போட்டிகளில், “முடிந்தது கதை”, “இதற்குப் பின் எதுவுமேயில்லை”, “தோல்வியை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் போலும்” என ஏதோ வொரு கட்டத்தில் உதடுகளைப் பிதுக்கி ஒத்துக் கொள்ள வேண்டி இருந்திருக்கும். ஆனால், அந்தச் சாத்தியக்கூறுகளில் இருந்து அசாத்தியமாக மீண்டு வந்து, சி. எஸ். கே. அணி த்ரில் வெற்றியைச் சுவைத் திருக்கும். இந்த உயிர்ப்பு, மோதிப் பார்த்து விட வேண்டுமென்ற உத்வேகம் இவை எல்லாம் டோனியால் அணிக்குள் கடத்தப்பட்டவை. தலைவன் எவ்வழியோ, படைகளும் அவ்வழிதானே?!

மற்ற அணிகள் எல்லாம் விளையாடும் பதினொரு வருடன் பல்லாங்குழி ஆடிக் கொண்டிருக்கும் சமயத்தில் சி. எஸ். கே. மட்டும் தோல்வி, வெற்றி என எதனையும் ஏற்றுக்கொண்டு அதே அணியோடே முன் னேறிக் கொண்டிருக்கும். கேதர் யாதவ் தொடர்ந்ததற்கான காரணம் முதல் வற்சனுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள் வரை ஏதோ ஒன்று, உறுத்தலாகி கேள்விக் கணைகளைத் தொடுக்க வைக்கும். ஆனால், அதற்கான பதில்கள் டோனியிடமிருந்து வராது அடுத்தடுத்த போட்டிகளின் முடிவிலிருந்து வரும். அடுத்தடுத்த ஆண்டுகளுக்கும் சேர்த்ததாக இருக்கும் அவரின் எண்ண ஓட்டங்கள். இருப்பதை வைத்துக் கொண்டு எப்படி முடியாததை முடித்துக் காட்ட வேண்டுமென்பது டோனி, நடத்திக் காட்டிய பாடம். “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற இறுமாப்பெல்லாம் முகத்திலோ சைகையிலோ வெளிப்படாமல், செயல்களில் வெளிப் படுத்த வைத்தவர்.

உள்ளூரில் மோதிப் பார்த்து 2010 மற்றும் 2011ஆம் ஆண்டு ஐ. பி. எல். கோப்பைகள், வெளியூர் அணிகளுடனும் பலம் காட்டி 2010 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் சம்பியன்ஸ் லீக் இருபது - 20 பட்டங்கள் என எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிய பின், கோப்பை களற்று வறண்டு காணப்பட்டது சி. எஸ். கேயின் வானிலை. இரண்டு ஆண்டுகள் தடை நெருஞ்சி முள்ளாய் நெஞ்சில் பாய, மீண்டெழவே முடியாதவாறு சி. எஸ். கே. இற்கு முகாரி பாடப்பட்டு விட்டது என்ற சமயத்தில்தான் 2018ஆம் ஆண்டு திரும்பி வந்தது - வீரர்கள் புடை சூழ, டோனி மறுபடியும் வேட்டையாட கிளம்பி வந்த காட்சிகள் இன்றளவும் சி. எஸ். கே. ரசிகர்கள் மனதில் பசுமையாக இருக்கும், “டோனி, டோனி” என மந்திரம் போல சேப்பாக்கம் மைதானமே அதிர, அணி திரும்ப ஆட இறங்கிய தருணம், டோனி யின் ரசிகர்களுக்கு மட்டுமல்ல சி. எஸ். கே. ரசிகர்களுக்கும் நெகிழ்வான கண்கள் பனிக்க வைத்த தருணம்தான்.

விலையில்லாத வைதானே விமர்ச னங்கள்? அப் போதும் கிளம்பி வந்தன. நம்பிக்கையுடன் டோனி அழைத்து வந்த அணி, “அப்பாக்களின் இராணுவம்” என இளக்காரமாகப் பார்க்கப்பட்டது. முன்னமே சொன்னதுபோல், புல்லையும் ஆயுதமாக்கும் கலை டோனிக்கு மனனம். அதே படையோடு வெற்றி நடை போட்ட போது விமர்சனங்களும் விமர்சகர்களும் காற்றோடு காணாமல் போக, சி. எஸ். கேயின் எழுச்சி யும் அதில் டோனியின் முயற்சியும் மட்டுமே பெரி தாய்ப் பேசப்பட்டது.

சி. எஸ். கேயை டோனியோ, டோனியை சி. எஸ். கேயோ, எத்தருணத்திலும் விட்டுக் கொடுத்ததில்லை. சென்னை அவரின் இன்னொரு வீடு எனச் சொல்லு மளவு, மனதளவில் அதனுடனான அவரது நெருக்கம் அதிகமானதால்தான். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெறும் முடிவைக் கூட சி. எஸ். கேயின் பயிற்சிப் பாசறையிலிருந்து வெளியிட்டார். அதுவும் எப்படி? ஒரு சாதாரண இன்ஸ்ட்ராகிராம் பதிவின் மூலமாக!

அவர் தலையசைத்திருந்தால், விசேட போட்டிகளை இந்தியன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அமைத்துக் கொடுத்திருக்கும். ஆனால் அது அவரின் பாணியில்லை. ஆர்ப்பாட்டமில்லாமல்தான் இந்திய அணியின் தலை மைப் பதவியிலிருந்து விலகினார், ஓய்வு முடிவை அறிவித்தார், இப்போதும்கூட அப்படியேதான் வெறும் விரல் அசைவுகளூடு எல்லாவற்றையும் முடித்துக் கொண்டிருக்கிறார். அதுதான் அவரின் தனித்தன்மை. கோலியுடன் நின்று, கற்றுக் கொடுத்து பின் விலகிய தைப் போல தற்போது ஜடேஜா விஷயத்திலும் அதே அணுகுமுறையைத்தான் டோனி பின்பற்றுகிறார். சுவ டில்லாமல் விலகுகிறார், ஆனால், இதயங்கள் உடையும் சத்தமோ எப்போதும் பலமாகவே கேட்கிறது.

களத்துக்கு உள்ளேயும் வெளியேயும் முழுமையான தலைவர் அவர். அவரின் ஒவ்வொரு நகர்வும் அணியை உச்சத்தை நோக்கிப் பயணிக்க வைத்துள்ளது. ஒரு சர்வதேச அணிக்கான தந்திரோபாயங்களை ஒவ்வொரு சி. எஸ். கே. போட்டியிலும் அரங்கேற்றினார். சகல துறை வீரர்களை சரியான வகையில் பயன்படுத்தியது, சுழல்வீரர்களின் பந்துகள் பவர் பிளேயில் அடி வாங்கும் என யோசிக்காமல் அவர்களைத் துணிவாக இறக்கி, வேறு கோணத்தில் யோசித்தது, வலக்கை இடக்கை இணைப்புக்கள் துடுப்பாட்ட வரிசை முழுவதும் தொடர கவனம் எடுத்துக் கொண்டது என அவர் செய்த சின்ன சின்ன மாற்றங்கள்தான், பெரிய தாக்கத்துக்கு வித்திட்டன. வேகத்துக்காக ஓவர்சீஸ் பந்துவீச்சாளர்களிடம் அடைக்கலம் புகாமல் இந்திய வேகங்களைக் கொண்டே கொண்டே சாமர்த்தியமாக விக்கெட்களை விழச் செய்தவர்.

தலைவராக மட்டுமல்ல, துடுப்பாட்ட வீரராகவும் சி. எஸ். கே. டோனிக்குக் கடமைப்பட்டிருக்கிறது. எந்தச் சூழ்நிலையில் துடுப்பு மட்டையோடு இறங்கினாலும், பந்து வீச வருவது எவ்வளவு பெரிய பந்துவீச்சாளராக இருந்தாலும், எட்ட வேண்டியது எவ்வளவு பெரிய இலக்காக இருந்தாலும், கையில் எந்த விக்கெட்டுமே இல்லாமல் இருந்தாலும், அவரின் முகத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வர முடியாது. தொடக்கத்தில் தட்டும் பந்துகளும் ஒன்றொன்றாகப் பெறும் ஓட்டங்களும் மட்டுமே அதிகமாக இருக்கும். ஆனால், இறுதியில் ஓட்டங்கள் றொக்கெட் வேகமெடுத்து தன் இலக்கைக் கச்சிதமாகத் தொட்டு விடும். கடைசி ஓவர், கடைசி பந்திலா வது ஹெலிகாப்டர் ஷொட் அடிக்கப்பட்டு வெற்றி சாத்தியமாகும். தலைமை இனிங்ஸ்கள் பல போட்டிகளில் அணியைக் கரை சேர்த்திருக்கிறது.

தலைவராக மட்டும் கிட்டத்தட்ட 40 என்ற ஆவரே ஜோடு 137 ஸ்ட்ரைக் ரேட்டோடும் ஓட்டங்களை குவித்துள்ளார் டோனி. பேட்டிங்கில் பராக்கிரமம் காட்டுவார் என்றால் விக்கெட் காப்பாளராக மின்னலை மிஞ்சுவார்.

“கப்டன் டோனி” இல்லாத சி. எஸ். கே. இனி எப்படி?

அவமானங்களைத் துடைத்தெறிந்து சி. எஸ். கேயை மீண்டெழ வைத்ததே டோனியின் உச்சகட்ட சாதனை யாகப் பார்க்கப்பட, அது எல்லாம் உதாரணம்தான் என்னுமளவுக்கு கடந்த ஆண்டு திரும்பியிருந்தது சி. எஸ். கே. இப்பொழுதும் வெற்றிக் கோப்பையோடும், நடப்பு சம்பியன் என்னும் புகழோடும்தான் தனது சக்கரவர்த்தி அரியணையில் ஜடேஜாவை அமர்த்தியுள்ளார் டோனி. இந்த ஒரு தொடரும் உடனிருந்து, ஜடேஜாவை செதுக்குவதுதான் அவரின் நோக்கமாக இருந்திருக்கும். சில விஷயங்களை நாம் இனி காண முடியாது என்பது வலி தரும் நிஜம்தான்!

“கப்டனாக தோனியின் சகாப்தம் முடிவுக்கு வந்தது” என்ற வருத்தம் காற்றில் கனமேற்றினாலும், ஒருவேளை இந்தத் தொடர் முடிந்து வீரராகவும் விடைபெற்றாலும், பயிற்றுவிப்பாளர் என்னும் அடையாளத்தோடு மறுபடியும் தொடர்வார் என்பதே உண்மை. அவரை விட்டு சி. எஸ். கே. எங்கே சென்றுவிடப் போகிறது? சி. எஸ். கேயை விட்டு டோனிதான் எங்கே சென்றுவிடப் போகிறார்?! களத்திற்குள் இருந்து பார்த்த பார்வையை விட, அடுத்த தொடரில் வெளியில் பயிற்றுவிப்பாளராக அமரும் அவரின் பார்வை இன்னமும் விசாலமாக விரியும். அது போட்டி அணிகளுக்கு இன்னமும் ஆபத்தானதாக இருக்கலாம். காரணம், அந்தக் கழுகுப் பார்வையில் இன்னமும் பல கோப்பைகளைச் சிக்க வைப்பதற்கான தெளிவு இருக்கும். “பாகுபலி 2” படத்தில் நாசர் சொல்வதுபோல “அவர் எங்கிருந்தாலும் அரசன்தான்!”

தலைவனாக அவர்,
இருந்தார்,
இருக்கிறார்,
இருப்பார்!






# கதையைக் கச்சிதமாக முடிக்க வேண்டிய தேவை இல்லை

**ஒரு கதையின் போக்கில், வருத்தத் தெரிவிக்கும் தொனியில், "சரி, சில சமயம் என்னுடைய சொந்தச் சிந்தனைகளாலேயேகூட நான் களைப்படைகிறேன்" என்று நான் நினைத்துக்கொள்வது உண்டு ஆக, நம் மனது வெறுமையை உணரும்போது உண்மையிலே ஒரு தியான நிலைக்குள் செல்வதற்கு நம்மால் இயல வேண்டும்.**

## லிடியா டேவிஸ் பேட்டி

கொரோனா காலகட் டத்தில் தமிழ் எழுத்தா ளர்கள் பலரும் குறுங்கதைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்: இதற்கு விதை போட்டவர்களில் ஒருவர் லிடியா டேவிஸ். 'அது எங்கள் நாயாக இருந்திருக்கக் கூடும். ஆனால், அது எங்கள் நாய் இல்லை. ஆகவே, அது எங்களைப் பார்த்துக் குரைக்கிறது' என்பதுபோல ஆங்கிலத்தில் பல ஒரு வரிக் கதைகளை எழுதியவர். மேன் புக்கர் சர்வதேச விருதுகள் உட்பட பல விருதுகளை வென்றவர். மார்செல் ப்ருஸ்த், கஸ்தவ் ஃப்ளொபெர் உள்ளிட்டோரின் படைப்புகளை பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார் லிடியா டேவிஸ். அவரது பேட்டிகளின் முக்கியமான பகுதி மட்டும், இங்கே..

நன்றாக எழுதுவதற்கு நீளமாக எழுதத் தேவையில்லை என்பதை நீங்கள் எப்போது உணர்ந்தீர்கள்?

1973ஆம் ஆண்டின் இலையுதிர்கால நாள் ஒன்றில்தான் என்பதை என்னால் துல்லியமாகக் கூறிவிட முடியும். அப்போது எனக்கு 26 வயது. ரஸல் எட்ஸனின் சிறுகதைகளை அல்லது வசன கவிதைகளைப் படித்துக்கொண்டிருந்தேன். ஏதோ ஒரு காரணத்தால் அவற்றால் நான் சுண்டி இழுக்கப்பட்டேன். "இவற்றைப் படிக்க வேடிக்கையாகவும், உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்திலும், சுவாரஸ்யமாகவும் இருக்கிறது, நானும் இவற்றைப் போல எழுத வேண்மென்று விரும்புகிறேன்" என்று நினைத்தேன். ஆகவே, என்னதான் நடக்கும் என்பதைப் பார்க்கவே, தினமும் மிகவும் சிறிய சிறு கதைகள் இரண்டை எழுதும் சவாலை எனக்கு நானே ஏற்படுத்திக்கொண்டேன்.

'கான்ட் அண்டு வோன்ட்' கதையில் வருவதுபோல் சுருக்கவடிவச் சொற்களைப் (contratctions) பயன்படுத்தியதற்காக உங்களுக்குப் பரிசுகள் மறுக்கப்பட்டிருக்கிறதா?

அப்படி நடந்திருந்தால் வேடிக்கையாக இருந்திருக்கும். அந்தக் கதை எனக்கு வந்த ஒரு கனவு. அதனை ரொம்ப நல்ல கனவு என்று நான் நினைத்ததால் கதையாக எழுதினேன்.

**ஒரு கதை எப்போது முடிகிறது என்பதை எப்படி அறிவீர்கள்?**

ஒரு கதையின் மையக் கரு எவ்வளவு பெரிது, அதற்கு எவ்வளவு இடம் தேவைப்படும், மிக முக்கியமாக அது பிறருடைய ஆர்வத்தை எவ்வளவு தூரம் தக்கவைக்கும் என்பதையெல்லாம் பற்றிய ஒரு உணர்வு அந்தக் கதையின் தொடக்கத்திலேயே எனக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு கதை எனக்கு இரண்டு தெரிவுகளை வழங்கும்போது அவற்றுள் எதையாவது ஒன்றை நான் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்போதுதான் அது எனக்கு ஒரு பிரச்சினையாக சில சமயங்களில் ஆகிவிடும்.

**எழுத்து உங்களுக்கு சலிப்பேற்படுத்துமா?**

சலிப்பேற்படுத்தினாலும் அதுவே கடந்துவிடும். அதாவது, ஒரு கதையின் போக்கில், வருத்தத் தெரிவிக்கும் தொனியில், "சரி, சில சமயம் என்னுடைய சொந்தச் சிந்தனைகளாலேயேகூட நான் களைப்படை கிறேன்" என்று நான் நினைத்துக்கொள்வது உண்டு; ஆக, நம் மனது வெறுமையை உணரும்போது உண்மையிலே ஒரு தியான நிலைக்குள் செல்வதற்கு நம்மால் இயல வேண்டும். அப்படி முடிந்தால் நன்றாக இருக்கும். அந்த வெறுமை நிலை ரொம்ப நேரம் நீடிக்காது. தற்காலிகமானதுதான்.

உங்களின் 'பிளைண்டு டேட்' வெறுமனே தற்கூற்றுக் கதையாக இருந்திருக்க முடியும் ஆனால், அதில் கதைசொல்லி தனது தோழி சொல்லும் கதையை, அந்தக் கதையில் கிட்டத்தட்ட எந்தக் குறுக்கீடும் செய்யாமல் கேட்டுக் கொண்டிருப்பாள். அதேபோல், 'பிரேக் இட் டவுன்' கதையில் கதையைத் தொடங்கிவைக்கும் 'அவன்' என்ற படர்க்கைக் கதைசொல்லி அதற்குப் பிறகு திரும்ப கதைக்குள் வருவதேயில்லை. எப்படி இந்த முடிவுகளை மேற்கொள்கிறீர்கள்?

இரண்டாவது கதையைப் பற்றி கொஞ்சம் எளிதாக என்னால் கூற முடியும். ஆரம்பத்தில் இன்னும் கொஞ்சம் மேலதிகக் கதைச் சட்டகத்தைக் கொண்டிருக்கும் கதையாகத்தான் அது எழுதப்பட்டது. தொழில்முறை எடிட்டராக இருக்கும் ஒரு தோழியிடம் அந்தக் கதையைக் காட்டினேன். அந்தக் கதையைப் படித்துப் பார்த்துவிட்டு அவர் மிகவும் நெகிழ்ந்துபோய், "கதையைச் சூழ்ந்திருக்கும் புறக் கதையை ஏன் நீ வெட்டியெறிந்துவிடக் கூடாது? உனக்கு அது உண்மையிலேயே தேவை இல்லை" என்று சொன்னார்.

ஆனாலும், தொடக்கத்தில் இருந்த அந்தச் சிறு பகுதியை நான் வைத்துக் கொள்ளவே விரும்பினேன். ஒரு ஆணின் பார்வையில் சொல்லப்படுவதாகக் கதை அமைவது தெளிவாகத் தெரிய வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள நான் விரும்பியிருக்கலாம். ஆகவே, கதை யின் தொடக்கத்தில் அந்த 'அவன்' தேவைப்படுகிறான், இல்லையென்றால் ஒரு பெண் அந்தக் கதையைச் சொல்வ தாக எடுத்துக்கொள்ளப்பட்டு முற்றிலும் மாறான ஒரு புரிதலைத் தந்திருக்கும். ஆகவே, கதையை முடித்துவைப்பதற் கான சட்டகம் தேவை யென்று நான் கருதவில்லை. ஒரு கதையைக் கச்சிதமாக முடிக்க வேண்டுமென்று இளம் எழுத்தாளர்கள் எண்ணுகிறார்கள் என்று நான் அடிக்கடி நினைத்துப் பார்ப் பதுண்டு. அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**கதையை எப்படித் திருத்துவீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?**

எனக்குக் கவலை ஏற்படுத்தும் ஏதும் கதையில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வரை நான் திரும்பத் திரும்பப் படிப்பேன். அப்போதும்கூட, சில சமயம் கொஞ்சம் பலவீனமாக இருப்பதாக நான் உணரும் கதைகள் இருப்பதுண்டு. ஒருவேளை அதற்கு மேலும் ஏதும் எனக்கு கவலை ஏற்படுத்தாமல் இருக்கலாம், கதை முடிந்துவிட்டதாக இருக்கலாம், ஆனால் உலுக்கியெடுக்கும் விதத்தில் இல்லாமல் இருக்கலாம். சில கதைகள் சட்டென்று முடிந்துவிடுகின்றன- அவற்றைத் திரும்பவும் பார்க்கும்போது கதை முழுமை பெற்றதாக இருப்பதையும் தலைப்பு மட்டுமே தேவைப்படுவதையும் உணர்ந்து அதற்குத் தலைப்பு வைப்பேன். சில சமயங்களில் தலைப்புகள்தான் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்திவிடும். சில சமயங்களில் அவை மிகவும் வெளிப்படையானவையாகவும் சில சமயங்களில் சிக்கலானவையாகவும் இருக்கும்.



**ஓர் இளம் எழுத்தாளருக்கு நீங்கள் அளிக்க விரும்பும் மிக முக்கியமான அறிவுரை என்ன?**

மிக முக்கியமான பல அறிவுரைகள் இருக்கின்றன. ஒன்றே ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்றால் சிறந்த எழுத்தாளர்களின் உத்தியையும் எழுத்தின் நுட்பத்தையும் மிக ஆழமாக உற்றுநோக்குங்கள். இந்த எழுத்தாளர்கள் பட்டியலில் நான் சில எழுத்தாளர்களை உள்ளடக்க மாட்டேன். எழுத்தின் மேன்மைக்காக ஜே.கே.ரோலிங்கின் எழுத்துகளை நான் உற்றுநோக்க மாட் டேன், இதைச் சொல்வதற்கு என்னை மன்னிக்கவும்.

தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள் வதற்கான நான் படித்த எழுத்தாளர் களின் பட்டியலை நான் விஸ்தரித் துக்கொண்டே இருக்கிறேன் - பெக் கெட், காஃப்கா, ஜாய்ஸ், நொபக்கோவ் ஆகியோரைத்தான் நான் எப்போதும் குறிப்பிடுவேன், இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள். ஜேம்ஸ் ஆகீ, சால் பெலோ, கிரேஸ் பாலீ என்று பலரையும் குறிப்பிடுவேன். இளம் எழுத்தாளராக இருந்தபோது நான் நிறையப் படித்தேன், நான் என்ன படித்தேன் என்பதைக் குறித்தும் வைத்திருந்தேன். உங்கள் இலக்கிய உணர்வு பரிணாமமடைவதற்கு ஏராளமான புத்தகங்கள் உங்களுக்குத் தீனி அளிக்கின்றன.

பெரும்பாலான எழுத்தாளர்கள் இலக்கணத்தை இலக்கியத்துக்கான ஒரு ஊடகமாக மட்டுமே பயன்ப்டுத்துவார்கள். நீங்கள் அதை கருப்பொருளாகவும் பயன்படுத்துகிறீர்கள், ஊடகமாகவும் பயன்படுத்துகிறீர்கள் அல்லவா?

எல்லா எழுத்துகளும் எழுத்துகளைப் பற்றியவைதான் அல்லது எல்லா ஓவியங்களும் ஓவியங்களைப் பற்றிய வைதான் என்று சிலர் கூறுவார்கள். ஒரு ஓவியமானது கன்னி மேரியையும் குழந்தை ஏசுவையும் பற்றியதாக இருக்கலாம், அது ஓவியத்தைப் பற்றியதும்கூட.

**தமிழில்: சோமசுந்தரம்**
**நன்றி: அருஞ்சொல்**

# சீதாக்கா!

**வ.ந.கிரிதரன்**

*1.*

*இன்னும் இருள் முழுதாக விலகியிருக்கவில்லை. இலையுதிர்காலம் தொடங்கி விட்டதால் இலேசாகக் குளிர் தொடங்கி விட்டிருந்தது. டொராண்டோ பஸ் நிலையத்தில் பயணிகளின் களை கட்டத் தொடங்கி யிருந்தது. மான்ரியால் செல்லும் நண்பனை அனுப்பி விட்டுப் புறப்படுவதற்கு ஆயத்தமான போதுதான் ”மன்னிக்கவும். நீ ஸ்ரீலங்கா நாட்டவனா?” என்று ஆங்கிலத்தில் ஆண் குரல் கேட்கவே திரும்பினேன். எதிரே வெள்ளையினத்தைச் சேர்ந்த பஸ் டிரைவரொருவன் நின்றிருந்தான்.*

*“ஆம். நண்பனே. என்ன விடயம்” என்றேன்.*

*“நல்லதாகப் போய் விட்டது. நான் மான்ரியாலிருந்து வந்த பஸ் டிரைவர். என்னுடைய பஸ்ஸில் ஒரு ஸ்ரீலங்காத் தமிழ்ப் பெண்ணொருத்தி வந்திருக்கிறாள். அகதியாக வந்தவள். இங்கு அவளுக்கு யாரையுமே தெரியாது. உன்னால் முடிந்தால் உதவ முடியுமா?”*

*“தாராளாமாக” வென்றேன்.*

*“மிகவும் நன்றி நண்பனே!” என்றவன் பயணிகள் தங்கியிருக்கும் கூடத்திற்குச் சென்று சிறிது நேரத்தில் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.*

*“நண்பனே! இந்தப் பெண்ணுக்குத் தான் உன் உதவி தேவை” என்றவாறு அழைத்து வந்த பெண்ணைப் பார்த்த எனக்கு வியப்புத் தாளவில்லை.*

*“சீதாக்கா” என்று கத்தியே விட்டேன்.*

*சீதா அக்காவுக்கும் என்னைக் கண்டதில் அளவிடமுடியாத வியப்புத் தான். எதிர்பாராத சந்திப்பல்லவா. மான்ரியால் பஸ் டிரைவருக்கு நன்றி கூறினேன். அவனும் ” உனக்கு முன்பே இவளைத் தெரியுமா? நல்லதாகப் போய் விட்டது. எல்லாம் கடவுள் அருள்” என்று கூறி விட்டுச் சென்றான்.*

*“சீதாக்கா நம்பவே முடியவில்லையே! ”யென்றேன்.*

*“எனக்கும் தான் மாது. பார்த்து எவ்வளவு நாளாச்சு ” என்றாள் சீதாக்கா.*

*சீதாக்கா உண்மையிலேயே நல்ல வடிவு தான். அதிகாலையில் எழுந்து, கோலம் போட்டு. அருகிலிருக்கும் பிள்ளையார் கோயில் சென்று கோயில் ஐயருக்கு வேண்டியு உதவிகளெல்லாம் செய்து வருவதையெல்லாம் வியப்புத் ததும்ப பார்த்துக் கொண்டிருப்பேன். ஊரில் யாருக்கு என்ன உதவியென்றாலும் உதவி செய்யத் தயங்காத உள்ளம் சீதாக்காவினுடையது. ஆண்பிள்ளையில்லாத குடும்பம். வயதான தாயையும் பார்த்துக் கொண்டு, ஊரிலிருந்த நெசவு சாலையில் வேலை பார்த்துக் கொண்டு, எந்தவிதமான சூழல்களையும் துணிவாக ஏற்றுக் கொண்டு வளையவரும் சீதாக்காவைப் பார்க்கும் போதெல்லாம் பெருமையாகவிருக்கும். சீதாக்காவுக்கு எப்பொழுதுமே துணை நான் தான். நூல் நிலையம் போகும்போது என்னைத் தான் எப்பொழுதும் கூட்டிச் செல்வாள். சீதாக்காவும் என் மூத்த அக்காவும் நல்ல சிநேகிதிகள். இருவருக்குமிடையில் நாவல்களைப் பரிமாறுவது நான் தான். கல்கி, விகடனில் வந்த தொடர்கதைகளை அழகாகக் கட்டி வைத்திருப்பாள். ஜெயகாந்தன், உமாசந்திரன், நா.பார்த்தசாரதி, அகிலன், கல்கி, ஜெகசிற்பியன் நாவல்களென்றால் சீதாக்காவுக்கு உயிர். ஆனால் ..சீதாக்கா பாவம். இவ்வளவு அழகிருந்தும், குணமிருந்தும் அவளுக்குக் கல்யாணம் மட்டும் ஆகவேயில்லை. இந்த ராஜகுமாரியைக் கூட்டிக் கொண்டு போக எந்த ராஜகுமாரன் வரப் போகின்றானோவென்றிருக்கும். நான் ஊரில் இருந்த வரையில் ஒரு ராஜ குமாரனுக்கும் அந்த அதிருஷ்ட்டம் வாய்த்திருக்கவில்லை. எண்பத்து மூன்று கலவரத்தைத் தொடர்ந்து நான் நாட்டை விட்டு வெளியேறி விட்டேன். அதன் பிறகு இப்பொழுதுதான் பத்து வருடங்கள் கழித்து சீதாக்காவைக் காண்கின்றேன்.*

*“சீதாக்கா நம்பவே முடியவில்லையே” என்றேன்.*

*“எனக்கும்தான் மாது. நம்பவே முடியவில்லை. நான் நம்புகிற கதிர்காமக் கந்தன் என்னைக் கை விடவில்லை” என்றாள் சீதாக்கா.*

*“சீதாக்கா எப்ப ஊரிலையிருந்து வந்தனீங்கள்”*

*“அது பெரியதொரு கதை. ஆறுதலாகச் சொல்லுகிறன். அது சரி நீ எப்ப கனடா வந்தனீ. ஜேர்மனியிலை நிற்கிறதாகவல்லவா கேள்விப்பட்டனான்”*

*“ஜேர்மனியிலைதான் இருந்தனான். போன வருஷம் தான் இங்காலை வந்திட்டேன். அங்கும் பிரச்சினைகள் தானே. நாங்களிருந்த இடத்திலை நாசிகளின்ற கரைச்சல் வேறு. மற்றது அங்கிருந்தால் “பேப்பரும்“ இலேசாகக் கிடைக்காது”*

*குடியுரிமைக்கான பத்திரங்களை “பேப்பர்” என்றுதான் பொதுவாகக் கூறுவது வழக்கம்.*

*“இங்கே யாரோடை இருக்கிறாய் மாது”*

*“நானும் ஒரு நண்பனுமாக அபார்ட்மெண்ட் எடுத்து இருக்கிறம். கோப்பி ஏதாவது குடிக்கப் போறீங்களா சீதாக்கா”*

*இருவருமாக அருகிலிருந்த டோனட் கடையொன்றுக்குச் சென்று காப்பி அருந்தி விட்டு எனது இருப்பிடம் நோக்கிப் பயணித்தோம். பாவம் சீதாக்கா. ஊரில் இருந்த போதெல்லாம அவளுக்கு ஏதாவது உதவிகள் செய்ய வேண்டுமென்று நினைப்பேன். ஆனால் அதற்கான வசதிகள் என்னிடமிருக்கவில்லை. ஆனால் இம்முறை எனக்கு அதற்கான வசதிகள் நிறையவேயிருக்கின்றன. சீதாக்காவுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டுமென மனதினுள் முடிவு செய்து கொண்டேன்.*

*“டொன்வலிப் பார்க்வே“யில் அதிகாலையென்றபடியால் வாகன நெரிச்சல் அவ்வளவாகவிருக்கவில்லை. மெல்லிய குளிர்காற்றில் விரைவதே சுகமாகவிருந்தது.*

*“சீதாக்கா நேராக ஊரிலிருந்தா வாறீங்கள்..”*

*“அது ஒரு பெரிய கதை. நானும் அவருமாக ஊரிலையிருந்து போன மாசம் ஒரு ஏஜெண்ட்டோடை வெளிக்கிட்டனாங்கள். அவரை சிங்கப்பூரிலை விமான நிலையத்திலை நிற்பாட்டிப் போட்டாங்கள். இனி இங்கையிருந்து கொண்டு தான் அவரைக் கூப்பிட முயற்சி செய்ய வேண்டும்”*

*என்ன! சீதாக்காவுக்குக் கல்யாணம் ஆகி விட்டதா? நிம்மதியாகவிருந்தது.*

*“சீதாக்கா எப்ப உங்களுக்குக் கல்யாணம் நடந்தது? எனக்குத் தெரியாதே.”*

*“போன வருஷம் தான். அவர் எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்திலை வாத்தியாராகவிருந்தவர். வெளியூர்க்காரரர். எங்களுடைய வீட்டிலைதான் சாப்பாடு. அப்ப ஏற்பட்ட பழக்கம் தான். நல்ல மனுஷண்டா மாது”*

*சீதாக்காவின் முகத்தில் வெட்கத்தின் சாயை படிந்தது.*

*“ஒன்றுக்கும் கவலைப் படாதையக்கா. எப்படியாவது அவரை இங்கே கூட்டி வந்து விடலாம்”*

*என்று சீதாக்காவுக்கு ஆறுதல் கூறியபொழுது மனதினுள் எப்படியாவது இம்முறை சீதாக்காவுக்கு உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்து கொண்டேன். அவளுக்குத் திருமணம் செய்து வைக்க உதவ வேண்டுமென எண்ணியதுண்டு. அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ அவளை அவளுடைய கணவனுடன் சேர்த்து வைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கட்டாயம் என்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்.*

*2.*


*“சீதாக்கா, இவன் தான் என் “ரூம்மேட்“ சபாபதி. உன்னை மாதிரித்தான் சரியான சாமி பைத்தியம். சபா! சீதாக்கா எங்களுடைய ஊர் தான். பஸ் டேர்மினலிலை தான் சந்தித்தனான். கொஞ்ச காலத்திற்கு எங்களுடன் தான் தங்கப் போகின்றா”*

*“ஹலோ. உங்களைப் பற்றி இவன் அடிக்கடி கதைப்பான் ” சபாபதிக்கும் சீதாக்காவுக்கும் உடனடியாகவே ஒத்துப் போய் விட்டது.*

*“மாது! உனக்கு நல்லதொரு நண்பன் வாய்த்திருக்கிறான்” என்று மனம் நிறைந்து பாராட்டினாள்.*

*சீதாக்கா வந்ததிலிருந்து எங்களுடைய அபார்ட்மெண்ட்டின் கோலமே மாறி விட்டது. அதுவரையில் பிரம்மச்சாரிகளுக்குரிய வகையில் அலங்கோலமாகக் கிடந்த அப்பார்ட்மெண்ட் தலைகீழாக மாறி விட்டது. அபார்ட்மென்டிற்கே ஒருவித வடிவும் ஒழுங்கும் வந்து விட்டது. அதிகாலையிலேயே எழுந்து விடும் சீதாக்கா டேப்பில் எம்.எஸ்.சின் சுப்ரபாதத்தினைப் போட்டு விடுவாள். குளித்து விட்டு எந்த வித விகல்பமுமில்லாமல் குறுக்குக் கட்டுடனேயே உலராத கூந்தல் தோள்களில் புரண்டபடியிருக்க அபார்ட்மெண்ட் முழுக்க சாம்பிராணி புகையை பரப்பி விடுவாள். அதுவரை அழுது வடிந்து கொண்டிருந்த அபார்ட்மெண்ட்டிற்கே ஒருவித லக்சுமிகரக் களை வந்து விட்டது.*

(தொடரும்)



# சிற்பகலைஞரை கௌரவிக்கும் நிகழ்வு





கொழும்பு 13, புதுச்செட்டித் தெரு சீரடி சாயி மந்திர் இராஜ கோபுரத்தை சிறப்பாக வடிவமைத்த தென்னிந்திய பூம்புகார் சிற்பகலைஞர் ஸ்தபதி பாவாடை ஸ்தபதி செல்வராசுவை கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை மாலை சீரடி சாயி பாபா முன்னிலையில், தலைவர் எஸ். என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரனை தலைவர் கௌரவிப்பதை படத்தில் காணலாம். ஸ்தபதி செல்வராசுவையும், கட்டிட நிர்மான பணிகளைமேற்கொண்ட ஆர். சிவகுமார் ஆகியோரை பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் கௌரவித்தார். இதில் கலந்து கோண்ட சீரடி, சாய்பாபா பக்தர்களையும் காணலாம்.

# பிரமாண்டமான சைவ சமய தீட்சை வழங்கும் விழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, இலங்கை சைவநெறிக்கழகம், இலங்கை சைவநெறி தொண்டர் கழகம் இணைந்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு சைவ சமய தீட்சை வழங்கும் சிவபுண்ணிய நிகழ்வானது அம்பாறை சம்மாந்துறை பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆறுமுகநாவலர் சபையின் பொதுச் செயலாளரும் இலங்கை சைவநெறிக் கழக த்தலைவருமான வைத்தியர் ஈசான தேசிகர் சிவ ஸ்ரீ தி.பிரதாபன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு தீட்சை வழங்குவதற்காக ஸ்ரீசர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு கிரியா திலகம் சைவ வித்தகர் சிவஸ்ரீ சச்சிதானந்தசிவம் குருக்கள் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கை சைவநெறிக்கழக பொதுச் செயலாளர் வெல்லாவெளி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளருமான வி.துலாஞ்சனன், சைவநெறி தொண்டர் கழக தலைவர் சி.வினோதரூபன்,பிரதித்தலைவர் செல்வி உதயகௌரி மற்றும் சம்மாந்துறை பிரதேச ஒன்றிய ஆலயங்களின் செயலாளர் சு.காந்தன், பிரதேச ஆலயதர்மகர்த்தாக் கள்,அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை இந்து கலாசார மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேறகொண்டார். நிகழ்வில் அறநெறி மாணவர்கள் ஆலய நிருவாகிகள் அறங்காவலர் பலரும் கலந்து கொண்டு தீட்சை பெற்றனர்.

**- காரைதீவு சகா**







# "மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்" நூல் யாழில் அறிமுகம்



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் "கருவி" மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்பும் இணைந்து நடத்திய - மூத்த ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் நூல் அறிமுக விழா யாழ்.நாச்சிமார் கோவில் கல்யாண மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

நிகழ்வுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிறி கஜன் தலைமை தாங்கினார். ஊடகவியலாளரும் எழுத்தாளருமாகிய ஷர்மிளா வினோதினி நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். மாற்றுத்திறனாளிகளுக்காகச் செயற்பட்டு வருகின்ற கருவி அமைப்பின் தலைவர்





க. தர்மசேகரம் வரவேற்புரையாற்றினார். எங்கட புத்தகங்கள் நிறுவனத் தலைவர் குலசிங்கம் வசீகரன் வாழ்த்துரை வழங்கினார்.

ஊடகவியலாளர் யாழ். தர்மினி பத்மநாதன் நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். வண்ணை காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் உப தலைவர் செல்லத்துரை திருமூர்த்தி நூலின் சிறப்புப் பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார். யாழ் போதனா வைத்தியசாலையின் உளவியல் மருத்துவ நிபுணர் சு. சிவதாஸ் தனது துறைசார்ந்த நிலையில் மாற்றத்தை நாடும் மாற்றுத்திறானளிகள் நூல் பற்றிய பார்வையைத் தனது உரையில் செலுத்தியிருந்தார். யாழ் பல்கைலக்கழக சமூகவியல்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் இரா.இரோஜஸ்கண்ணன் இந்நூலின் சமூகவியல் முக்கியத்துவம் குறித்து கருத்துரையாற்றினார். நூலாசிரியரின் ஏற்புரையைத் தொடர்ந்து சிரேஸ்ட ஊடவியலாளர் கணபதி சர்வானந்தா நன்றியுரையாற்றினார்.


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ



❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.



34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?



## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 26. 1 | 29. 2 | 32. 1 | 35. 1 |
| 27. 2 | 30. 3 | 33. 1 | 36. 1 |
| 28. 2 | 31. 1 | 34. 2 | 37. 1 |
| | | | 38. 2 |

### கல்வி tv CHANNEL-1

**27.03.2022 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**27.03.2022 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நெருக்கடியில் இருந்து மீள கொள்கை மாறவேண்டும்!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, மார்ச் 27

**இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்னையில் இருந்து விடுபடுவதற்கு கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், கறுப்பு சந்தையில் இடம்பெறும் நாணய மாற்றுச் செயற்பாடுகளை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டை மீள கட்டியெழுப்புவது கடினமான விடயமில்லை.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட சில கொள்கை ரீதியான தீர்மானங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. அவற்றை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அத்துடன் கறுப்பு சந்தைகளில் நாணய மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கறுப்பு சந்தைக்கு ஏற்ற வகையில் டொலரின் பெறுமதி அதிகரிக்கப்படுகிறது - என்றார்.(அ)

# ஏப்ரல் 21 தாக்குதல் சந்தேகநபர்கள் 16 பேருக்கு நிபந்தனையுடன் பிணை

கொழும்பு, மார்ச் 27

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 பேருக்கு, இரண்டரை வருடங்களின் பின்னர், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே முன்னிலையில், நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.


அவர்கள் தலா இரண்டு கோடி ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதேநேரம், சந்தேகநபர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதித்துள்ள நீதிமன்றம், பிணையாளர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்கவேண்டும் என்றும் பிணை நிபந்தனை விதித்துள்ளது.

அத்துடன், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறும், நீதிமன்றம் சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சந்தேகநபர்கள், அம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் காத்தான்குடி முதலான பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பயிற்சி முகாம்களில், ஆயுதப் பயிற்சி உட்பட, ஐ.எஸ். அடிப்படைவாதம் தொடர்பிலான பயிற்சிகளில் பங்கேற்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதென பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு நீதிமன்றில் தெரிவித்தது. (அ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 02 - 1930 | 24 - 03 - 2022 |

### நாகமுத்து சண்முகசுந்தரம்

மாவிலங்கை அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சண்முகசுந்தரம் அவர்கள் 24.03.2022 அன்று இறைபதம் எய்தினார்

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், கேதீஸ்வரனின் (சுவிஸ்) பாசமிகு தந்தையும், விஜிதாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், டர்ணிகாவின் (சுவிஸ் - மருத்துவபீட மாணவி) பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லப்பா, வைத்தியலிங்கம், வேலுப்பிள்ளை, இளையதம்பி, கனகம்மா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இரத்தினம் மற்றும் சுப்பிரமணியம், பரராஜசேகரம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாவிலங்கை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு : **0774478935**

## நடுவீதியில் தீப்பற்றிய கார்!



கொழும்பு, மார்ச் 27

கொழும்பில் நடுவீதியில் நேற்று சொகுசு காரொன்று திடீரென தீப்பற்றிக் கொண்டது.

பேஸ்லைன் வீதியின், தெமட்டகொட மேம்பாலத்தில் இந்த சம்பவம் பதிவாகியது.

இந்த சம்பவத்தையடுத்து அந்த வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. (அ)

# சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்ந்த எட்டு பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச் 27

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 8 பேரை ஹற்றன் பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவு கைது செய்துள்ளது.

ஹற்றன் விசேட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரேமலால் தலைமையில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த 8 பேரும் கைது செய்யப் பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மாணிக்ககல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட ஒரு சில உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யபட்ட 8 பேரும் மஸ்கெலியா, நோர்வூட், பொகவந்தலாவை, ஹற்றன் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் 8 பேரையும் ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# துமிந்தவுக்கு திருமணம்!





கொழும்பு, மார்ச் 27

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வா ஜூன் மாதம் திருமண பந்தத்தில் இணையவுள்ளார்.

முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவின் பேச்சாளராக கடமையாற்றிய நிஷாரா ஜெயரட்னவையே அவர் திருமணம் செய்துகொள்ளவுள்ளதாக நீதித்துறை வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

குதிரைப்பந்தய வீராங்கனையான நிஷாரா ,சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாக பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் இந்த திருமணம் நடைபெறவுள்ளதாக மேலும் தெரியவந்தது. (அ)

# வாழைச்சேனை கடதாசி ஆலையை தரமுயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 27

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை தரமுயர்த்துவதற்கும் எதிர்பார்ப்பதாக கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.



நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடியால் காகித உற்பத்திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வது தடைப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இதனை கூறினார்.

அத்தோடு, தற்போது நிலவும் காகிதத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, எதிர்காலத்தில் நாட்டில் பல புதிய தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வினாத்தாளை அச்சிட தேவையான கடதாசி பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து, பாடசாலைகளில் இடம்பெறவிருந்த பல பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 5,000 இலங்கை மருத்துவ மாணவர்கள் சீனாவின் பயணத் தடையால் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 27

சீனாவில் இருந்து 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நாடு திரும்பிய சுமார் 5,000 இலங்கை மருத்துவ மாணவர்கள், தற்போது மீண்டும் தங்கள் படிப்பைத் தொடர முடியாத நிலையில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

சீனாவில் கோவிட்-19 பரவியதில் இருந்து ஆறு வருட மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் நாடு திரும்பியிருந்தனர். ஆனால் வெளிநாட்டவர் வருவதைத் தடை செய்ததால் அவர்களால் சீனாவுக்கு திரும்ப முடியவில்லை.

இந்த மாணவர்களில் பெரும்பாலோர் மருத்துவப் பயிற்சி பெறவேண்டும். ஆனால் சீனப் பல்கலைக்கழகங்கள் இந்த மாணவர்களை ஒன்லைன் பயிற்சியைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிம்ஸ்டெக்...

கொழும்பில் நாளை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்வதற்கான பிம்ஸ்டெக் செயலாளர் நேற்று இலங்கை வந்தடைந்தார். (அ)

## ராஜபக்ஷக்களின்...

அரசே காரணம்.

தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றபோதும் அரசையும் நாட்டையும் வீழ்ச்சியுறச் செய்வதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தற்போதைய சவால் நிலையை நாம் நிச்சயம் எதிர்கொள்வோம் - என்றார். (அ)

## சர்வதேச...

இதனால் சுற்றுலா பயணிகளின் வருகை இழப்பு மற்றும் பல கடுமையான முடக்கங்கள் தேவைப் பட்டன.

கோவிட்-19 இன் தாக்கம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்திற்கும் அதிகமான நிதிப் பற்றாக்குறைக்கு வழிவகுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நம்பகமான மற்றும் தெளிவான மூலோபாயம், சமூக பாதுகாப்பை அவசரமாக நடை முறைப்படுத்துதல், பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரிகள் அதிகரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்திலும் விவாதம் இடம்பெறவுள்ளது. (அ)

## 13தான்...

அமைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடன் கட்சியின் யாழ்.தலைமை செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அண்மையில் கடிதம் எழுதிய தரப்புகள் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட தரப்புகள் என்பன 13ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபையையே வலியுறுத்தியுள்ளனர்.

இதை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஈ.பி.டி.பி. வலியுறுத்திய சந்தர்ப்பங்களில் எல்லாம், எம்மை தமிழ் மக்களுக்கு விரோதமானவர்களாகவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணான கருத்துக்களை தெரிவிப்பவர்களாகவும் இதே தரப்பினர் மக்களிடம் கூறிவந்தனர்.

சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு மட்டற்ற அதிகாரங்களுடனான தீர்வை வழங்கும் என்றும் கூறிவந்தனர்.

ஆனால், ஈ.பி.டி.பி. கட்சியினால் முன்வைக்கப்படும் நிலைப்பாடுகளும் பொறிமுறைகளுமே யதார்த்தமானது என்பது சர்வதேச நாடுகளினாலும் சர்வதேச அமைப்புக்களாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமது அரசியல் இருப்பிற்காக காலத்துக்கு காலம் சுருதியை மாற்றுகின்ற குறித்த தமிழர் தரப்புக்கள் இப்போது எமது வழிமுறைக்கு வந்துள்ளனர்.

இதனை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தெளிபடுத்துவதன் மூலம் எதிர்காலத்திலாவது மக்கள் ஏமாறாமல் சரியானவர்களை தெரிவு செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# யாழ். வருவாரா ஜெய்சங்கர்?

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையம் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதற்கான ஒழுங்கமைப்புக்கள் இந்தியத் துணை தூதரக அதிகாரிகள், யாழ்.மாநகர சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் யாழ்ப்பாணத் துக்கு வந்து இதனைத் திறந்து வைக்கும் சாத்தியம் உள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)



# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலை 27 ஆவது கலைவிழா நிகழ்வு




வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலை மாணவர்களின் 27 ஆவது கலைவிழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் வைத்தியர் ப.சத்தியநாதனின் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இதன் போது பிரதம விருந்தினர்களிற்கு மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டிருந்ததுடன், பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இதன் போது இடம்பெற்றிருந்தது. மேலும் பாலர் பாடசாலை மாணவர்களின் திறமைகளிற்காக நினைவு கின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, வவுனியா வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. அன்னமலர் சுரேந்திரன், சிறப்பு விருந்தினராக, முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் வீரவாகு பரஞ்சோதி, கௌரவ விருந்தினராக, திருமதி. கமலாதேவி குமாரதாஸ், பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மனிதாபிமான...

மீன்பிடி தொடர்பான இந்திய-இலங்கை கூட்டு செயற்குழுவின் 5ஆவது கூட்டம் நேற்று முன் தினம் மெய்நிகர் வழி மூலம் இடம்பெற்றது. இதன் போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது

மீன்பிடிப் படகுகள் கைப்பற்றல் நடவடிக்கையின்போது உயிரிழப்புகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளை எச்சரிக்கையுடன் செயல்படுமாறு இந்திய தரப்பு இதன்போது கேட்டுக்கொண்டது.

இரு நாட்டு மீனவர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புக்கு அந்தந்த அரசாங்கங்கள் வழங்கிய மிக உயர்ந்த முன்னுரிமையை இரு தரப்பினரும் இதன்போது மீண்டும் வலியுறுத்தினர்.

எந்தச் சூழ்நிலையிலும் பலாத்காரத்தைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது என்பதை இரு நாடுகளும் இதன்போது ஒப்புக்கொண்டன.

பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவில் மீன்வளம் தொடர்பான பிரச்னைகளைச் சமாளிப்பதற்கான-தொடர்ச்சியான இரு தரப்பு ஒத்துழைப்பை இரு தரப்பினரும் இதன்போது ஆராய்ந்தனர்.

கூட்டு கடற்படை ரோந்து உட்பட, பாதுகாப்பான மற்றும் நிலையான மீன்பிடியைப் பராமரிக்க இரு அரசாங்கங்களும் மேற்கொண்ட ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு இரு தரப்பும் பாராட்டுகளைப் பகிர்ந்து கொண்டன.

ட்ரோலர்கள் பயன்படுத்தும் முறைகள் குறித்து இலங்கை தரப்பு இதன் போது தனது கவலைகளை எழுப்பியதுடன், வாழ்வாதார இழப்பைத் தணிக்க பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இரு நாடுகளும் இணைந்து செயல்படவேண்டியது அவசியம் என்று இந்தியத் தரப்பு வலியுறுத்தியது. (அ)

# இறுதிக் கிரியையின்போது மின்னல் தாக்கி 25 பேர் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 27

மாவனெல்லை-பெமினிவத்த பிரதேசத்தில் மின்னல் தாக்கியத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரணமடைந்த நபருக்கான இறுதிக் சடங்குகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் மாவனெல்லை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## தமிழ்க்...

இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்திப்பில் இனப்பிரச்னைக்கான இறுதித் தீர்வு தொடர்பில் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் நடக்கவில்லை என்பது ஊடகங்கள் மூலம் உறுதியாகின்றது.

அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கத்திலிருந்து 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான அழுத்தங்கள் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. இது சம்பந்தமாக நாம் தெரிவித்து வந்த கருத்துக்கள் மீண்டும் உறுதியாவதாகவே கருதுகிறோம்.

கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழர்களை தடை செய்த அரசு தற்போது பொருளாதார நெருக்கடி எழுந்துள்ளபோது அந்த புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது. புலம்பெயர் தமிழர்கள் மீதான தடையை நீக்குவதற்குக்கூட அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி உள்ளது. இது எதை காட்டுகிறது என்றால், தடை என்பது இலங்கை அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமான விடயம் அல்ல என்பதே ஆகும்.

13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்ற ரெலோ, ஜனாதிபதியுடனான சந்திப்பை ஏன் புறக்கணித்தார்கள் என்பது கேள்விக்குறியே! அவ்வாறெனில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேற வேண்டும் - என்றார். (அ)

## ஜெய்சங்கரின்...

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் அழைப்பின்பேரில் இந்திய வெளி விவகார அமைச்சர் இந்த உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் 30ஆம் திகதி வரை வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் அமையவுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இந்த விஜயத்தின்போது, கொழும்பில் நடைபெறும் பிம்ஸ்ரெக் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார் என இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாணய...

நெருங்கிச் செயற்படத் தயார் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான "உறுப்புரை 4" ஆலோசனை மற்றும் பணிக்குழாம் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய வங்கி தமது நிலைப்பாட்டை அறியப்படுத்தியுள்ளது. (அ)

## இன்றும்...

மாலை 5.30 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை 1 மணி நேரம் 15 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், பி முதல் டபிள்யூ வரையிலான பிரிவுகளில் மாலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை 2 மணி நேர மின்வெட்டும் அமுல்படுத்தப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# அத்தியாவசிய பொருள்கள் சதொச கிளைகளில் இல்லை

கொழும்பு, மார்ச் 27

சதொச கிளைகளில் பல அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லையென நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரிசி, சிவப்பு பருப்பு மற்றும் சீனி விற்பனைக்கு சதொச நிறுவனம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சதொச கிளை முகாமையாளர்களுக்கு சதொச நிர்வாகம் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. குறித்த சுற்றறிக்கையை மீறிச் செயற்படும் ஊழியர்களை பணியிலிருந்து இடைநிறுத்தி, ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 'வீதி ஒழுங்கு பேணி பயணிப்போம்' எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 27

மோட்டார் போக்குவரத்து திணைக் களம் மற்றும் வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் "வீதி ஒழுங்குகளை பேணி பாதுகாப்பாக பயணிப்போம்" எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை யாழில் இடம்பெறவுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜிவா சிவதாஸ் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகி யோரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இவ் நடமாடும் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந் துள்ள வடக்குமாகாணசபை வளாக கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

பல ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப் படாத பிரச்சனைகளை இனங்கண்டு தீர்க்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், வாகன உடமை மாற்றங்கள், வாகன பதிவுப் புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் நிறைச் சான்றிதழை பெறல், வாகன உடமை மாற்ற படிவங்களை கையேற்றல், சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங் களின் மாற்றம் தொடர்பான விடயங் கள், சாரதி அனுமதி பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனை, வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளல்,

2015ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட முன்மொழி அடிப்படையில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான நிபந்தனை நீக்கம் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்தில் உள்ள இடர்பாடுகள் மற்றும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் நேரடியாக கொழும் புக்குச் சென்று சேவைகளை பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மக்களுக்கு அருகில் இந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவையை ஒழுங்க மைக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை தொடர் பான மேலதிக விவரங்களை பிரதேச செயலகங்களில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவிலும்

யாழ் .மாவட்ட செயலகத்தில் உள்ள பிரதி மோட்டார் போக்குவரத்து ஆணையத்திலும் வட மாகாண போக்கு வரத்து பிரிவிலும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.




# குருசடித்தீவு அந்தோனியார் திருவிழா சிறப்பாக நடந்தது





குருநகர்,பாசையூர் ,நாவாந்துறை ,கொழும்புத்துறை ஆகிய இடங்களில் இருந்து கடல்வழி மூலமாக வருகை தந்த பக்தர்கள் புனித அந்தோனியாரின் திருவிழாவில் பங்கேற்றனர். (அ)

யாழ்ப்பாணம், மார்ச் 27

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

கூட்டுத்திருப்பலியுடன் திருச்சொருபப்பவனியை யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி நடத்தினார்.

திருவிழாவின் கொடியேற்றம் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது.

# மின்சார நெருக்கடி மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, மார்ச் 27

எதிர்காலத்தில் மழை பெய்யாவிடில் மின்சார நெருக்கடி மேலும் அதிகரிக்கும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீர் மின் நிலையங்களில் உள்ள நீர் இன்னும் 10 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கெலவரப்பிட்டிய அனல் மின்நிலையத்தில் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் எரிபொருள் மற்றும் டீசல் கிடைக்காவிட்டால் மின்சார உற்பத்தியில் தாமதம் ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

தற்போது நீர் மின்சாரத்தில் இருந்து 9 மில்லியன் அலகு மின்சாரம் பெறப்படுவதாகவும், இந்த நிலை காரணமாக எதிர்காலத்தில் மின் உற்பத்தியில் சிக்கல்கள் மோசமடைவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கோழி இறைச்சியின் விலை மேலும் உயரும் சாத்தியம்

கொழும்பு, மார்ச் 27

அதிகரித்து வரும் கோழித் தீவனப் பொருட்களின் விலைகள் காரணமாக சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கலாம் என அகில இலங்கை கோழிப் பண்ணையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர, டொலர் தட்டுப்பாடு மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர் என கூறினார்.

அதிகரித்து வரும் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் பலர் வியாபாரத்திலிருந்து விலகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய கடன் வழியாக 1,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும் குணசேகர தெரிவித்தார்.

கோழிப்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல பெரிய அளவிலான நிறுவனங்கள் வெளிநாடுகளில் உள்ள அந்தந்த தாய் நிறுவனங்களிடமிருந்து கடனாக இறக்குமதி செய்வதன் மூலம் மூலப்பொருட்களின் விநியோகத்தை பூர்த்தி செய்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் வியாபாரம் இல்லாமல் தவித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)




# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23 - 03 - 1955 |  | 24 - 03 - 2022 |

## நவரட்ணம் ஸ்ரீகாந்தா
### (யூனியன் கப்பல் பபா)

**பழைய மாணவர்- மல்லாகம் இந்துக் கல்லூரி தெல்லிபழை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, உதைபந்தாட்ட வீரர் (Soccer Player), முன்னை நாள் பொலிஸ் உத்தியோகத்தர், Greek Ship இல் Bosun ஆக நீண்டகாலம் பணியாற்றியவர்**

யாழ். மல்லாகம் நீலியம்பனைப்பிள்ளையார் கோவிலடி தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும், சிவகாந்தபதியை வசிப்பிடமாகவும், அச்சுவேலி வளலாயை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஸ்ரீகாந்தா அவர்கள் 24.03.2022 வியாழக்கிழமை அன்று கனடா Scarborough வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - நவறட்னம் (காணி இலாகா உத்தியோகத்தர்- யாழ். கச்சேரி) சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை(பிரபல வர்த்தகர்- வினாயகர் ஸ்ரோர்ஸ்) செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,அருந்தவநாயகி அவர்களின் அன்புக் கணவரும், மாதுளன் (Max, சென்ரானியல் College, றைசன் யூனிவேர்சிற்றி பழைய மாணவர்- Bell Canada), மாதுஜன் (MATT, சென்ரானியல் College, யோக் யூனி வேர் சிற்றி பழைய மாணவர் C.T.B.C Bank) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. சறோஜினி மாணிக்கராஜா(லண்டன்) அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், மனோரஞ்சிதம் மற்றும் அரியரட்ணம், தவமணிதேவி(கனடா), ஸ்ரீறங்கநாதன்(கனடா), குணரட்ணம் (ஜேர்மனி), யோகேஸ்வரி ஜெயரட்ணம்(கனடா), காலஞ்சென்ற பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்பிரமணியம்(கனடா), யோகநாயகி(அச்சுவேலி), நவறட்ணராஜா(பிரான்ஸ்), பாலசிங்கம்(Montreal), காலஞ்சென்ற சுகுணராஜா ஸ்ரீஸ்காந்தராஜா(கனடா), ஆனந்தகௌரி(Montreal), சரவணபவானந்தன் (Montreal) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணானந்தநாயகி, சுப்பிரமணியம், குமாரச்செல்வி, குலசிங்கம், சிவபாக்கியம், மாலினி, காலஞ்சென்ற ஸ்ரீரவீந்திரன், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு*
Monday, 28 Mar 2022 5:00 PM - 9:00 PM
Tuesday, 29 Mar 2022 9:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Tuesday, 29 Mar 2022 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Tuesday, 29 Mar 2022 12:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**அருந்தா - மனைவி**
**Mobile : +14163356558**
**மாதுஜன்(Matt) - மகன்**
**Mobile : +16474096225**

தகவல் :
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-காதலுக்கு மரியாதை
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




**இரவு**

7.00 மணி : SPOTLIGHT - எம்.கே. சிவாஜிலிங்கம்
- தமிழ் தேசிய கட்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை - ஸ்ரீலங்கா
சுதந்திர கட்சி பொதுசெயலாளர்
இராஜாங்க அமைச்சர்-தயாசிறி ஜெயசேகர




**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**சிவி**

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகசோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு